Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

# தினமுரசு
THINAMURASU
தினப்பதிப்பு


முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (19.05.2013) பக்கங்கள் 20 ஓசை - 231

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2486)
















# கஜேந்திரன் கைது



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் ஆறு பெண்கள் உட்பட 15 பேர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் அக்கட்சியின் சார்பில் முள்ளிவாய்க்கால் நினைவுநிகழ்வு ஒன்றை நடத்தியபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கஜேந்திரனுடன், அவர்களது கட்சியின் தேசிய அமைபபாளரான சட்டத்தரணி மணிவண்ணன் உட்படப் 15 பேரும் கைது செய்யப்பட்டதாகக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்டோரில் அறுவர் மட்டுமே நேற்றிரவு எட்டு மணியளவில் விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட அனைவரும் கட்சியின் ஆதரவாளர்களான பெண்களாவர். எஞ்சியவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது விடுதலை பற்றி தகவல்கள் இல்லாதுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பு கண்டனம்

யுத்தத்தில் உயிர்நீத்த தம் சொந்தங்களை நினைவு கூர்ந்து கண்ணீர்மல்க அமைதியாக அனுஸ்டிக்கப்பட்ட இரங்கல் கூட்டத்தில் வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இக் கைதினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என அதன். பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# முள்ளிவாய்க்கால் நினைவு வடக்கில் அனுஷ்டிப்பு

இறுதிப் போரின்போது, முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவு தின நிகழ்வுகள் வடமாகாணத்தின் பல இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களும், பல்கலைக்கழக ஆசிரியர்களும் நேற்று முன்தினமே தீபங்களை ஏற்றி அஞ்சலி செலுத்தியதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், வவுனியா நகர சபை மண்டபத்தில் பிரதான அஞ்சலி நிகழ்வுகளும் கூட்டமும் இடம்பெற்றன. மக்களும், பெற்றோரை இழந்த சிறுவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். மெழுகு திரிகள் ஏற்றி இறந்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், எஸ். சிறிதரன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் பவான், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், இடதுசாரிக் கட்சியைச்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கிலிருந்து இராணுவம் திரும்பப் பெறப்படமாட்டாது

## அரசாங்கம் அறிவிப்பு


(கொழும்பு)

வெளிநாட்டு சக்திகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கு அமைய வடக்கில் இருந்து இராணுவத்தை திரும்பப்பெறுவதில்லை என அரசாங்கம் இறுதியான முடிவை எடுத்துள்ளது. வன்னி இராணுவ நடவடிக்கைக்கு நேற்றுடன் 04 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. அரசாங்கம் இந்தத் தீர்மானம் குறித்து மேற்குலக நாடுகளின் தூதுவர்களுக்கும் அறிவித்துள்ளது.

மேற்குலக நாடுகளைச் சேர்ந்த 6 தூதுவர்கள் அடிக்கடி வடபகுதிக்குச் சென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, இராணுவ முகாம்கள் குறித்து விசாரித்து அறிந்துள்ளனர். இலங்கையின் பாதுகாப்பு தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்த முடியாது என தெரிவித்துள்ள அரசாங்கம், அவர்களின் கோரிக்கையையும் நிராகரித்துள்ளது.

# மனிதக் கேடய மக்களுக்கு உதவ புலம்பெயர்ந்தோர் முன்வரவில்லை

## யுத்த வெற்றிவிழாவில் ஜனாதிபதி



(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலிகளால் மனிதக் கேடயங்களாக தடுத்து வைக்கப்பட்ட மக்களை மீட்டெடுத்த போது அவர்களுக்கு சாப்பாடு கொடுப்பதற்கு எவருமே முன்வரவில்லை. புலம்பெயர்ந்தவர்களும் முன்வரவில்லை. அவர்களுக்கு இராணுவமும், அரசாங்கமுமே உணவு கொடுத்ததென காலிமுகத்திடலில் நேற்றுக் காலை நடைபெற்ற போர் வெற்றிவிழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது, தாய்நாட்டை மீட்டெடுத்த வெற்றிவிழாவை நான்காவது ஆண்டாகவும் கொண்டாடுவதையிட்டு பெருமை கொள்கிறேன்.

இலங்கையின் வரலாற்றில், நாடு ஒன்றிணைக்கப்பட்ட முக்கியமான சந்தர்ப்பம் இது.

தாய்நாட்டை மீட்டெடுப்பதற்காக இலட்சக்கணக்கானோர் பலியானார்கள், உடல் உறுப்புகளை இழந்தனர்.

இரத்தம் மற்றும் வியர்வையை

19 ஆம் பக்கம் பார்க்க

# கழுத்து வெட்டி கொன்றவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பணக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான வாக்குவாதம் கழுத்து வெட்டிக் கொலை செய்யுமளவிற்கு சென்ற நிலையில கழுத்து வெட்டிக் கொலை செய்த நபருக்கு யாழ்.மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ஊர்காவற்றுறை சரவணைப் பகுதியில் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஊர்காவற்றுறை சரவணைப் பகுதியில் சதாசிவம் தயாபரன், சுப்பிரமணியம் தர்மராசா,

19 ஆம் பக்கம் பார்க்க

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வவுனியாவில் உடைப்பு

(வவுனியா)



வவுனியா சமணங்குளப் பகுதியில் முள்ளி வாய்க்காலில் மரணித்த மக்களின் நினைவாக 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நினைவுத் தூபி நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் உடைத்து நொருக்கப்பட்டுள்ளது.

குறித்த நினைவுத்தூபி நிறுவப்பட்ட இடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 4ஆம் ஆண்டு நிகழ்வு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே...

க.பொ.த. உயர்தர இந்துநாகரிக பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

# வெசாக்கை முன்னிட்டு அலங்கார வளைவுகள்

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்.நகரில் வெசாக் அலங்கார வளைவுகள், தோரணங்கள் மற்றும் கூடுகள் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளர்.

யாழ்.நூலக வீதியில் வெசாக்தினத்தை வெளிப்படுத்தும் அலங்கார நிகழ்வுகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வருடாவருடம் படையினர் இந்தப்பகுதியில் இவ்வாறு வெசாக் அலங்கார நிகழ்வுகளில் ஈடுபட்டு வெசாக் தினத்தில் பொதுமக்கள் இந்த அலங்காரத்தினைப் பார்வையிடவும் ஒழுங்குகள் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் வெசாக்தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை தெரிந்ததே. (பா)

# டெங்கின் தாக்கம்; 319 பேர் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இந்த வருடத்தில் நேற்றுவரை டெங்கு நோய்த் தாக்கத்திற்கு இலக்காகிய 319 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக அவ்வைத்தியசாலையின் புள்ளிவிபரமொன்று தெரிவித்துள்ளது.

இந்த மாதம் மட்டும் நேற்று வரை 18 பேர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும், அந்த புள்ளி விபரங்கள் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்சமயம் டெங்கு நோயின் தாக்கம் சற்றுக்குறைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளன.

யாழ்.போதனா வைத்திய சாலை வட்டாரங்கள், கடந்த மாதத்தை விட இந்த மாதத்தில் டெங்கு நோய்க்கு சிகிச்சை பெற்றவர்கள் குறைவு எனவும் தெரிவித்துள்ளன. (பா)

## பரிசளிப்பு

மாற்றுக் கொள்கைக்கான நிதியம் மாணவர்களிடையே நடத்திய மொழியும், மனிதநேயமும் என்னும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் எழுது மட்டுவாழ் ஸ்ரீ கணேஷவித்தியாலய மாணவி செல்வி டிலக்சனா பரமானந்தஜோதி மாவட்ட நிலையில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான சான்றிதழும், 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும், புத்தகமும் வழங்கப்படவுள்ளது.

# மாணவர்களின் கல்வித்தரத்தின் மேம்பாட்டிற்காக பாடுபடவேண்டும்



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும், எமது மாணவர்களின் முன்னேற்றத்திற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் பாடுபட வேண்டும் என யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அதிபர் இந்திரலிங்கம் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்களின் கல்வித் தரத்தினை முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை கல்விச் சமூகத்தினரே முன்னெடுக்க வேண்டும். கஷ்டப் பிரதேச பாடசாலைகள் எனக் கூறிக் கொண்டு எமது மாணவர்களின் முன்னேற்றத்தை மழுங்கடிப்பதைக் கைவிட்டு இருக்கின்ற வளங்களை சரியான முறையில் கையாண்டு பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும்.

மாணவர்கள் பாடசாலை முடிந்ததும் வீடுகளிற்கு சென்று படித்தவற்றை மீட்டல் செய்ய வேண்டும். இதற்கு பெற்றோர்களே மாணவர்களின் கல்வியில் கூடுதல் அக்கறை உடையவர்களாக செயற்பட வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். நாம் வெறுமனே குறைகளை மட்டும் கூறிக் கொண்டிருப்பதை கைவிட்டு குறைகளை நிறைகளாக மாற்றி மாற்றத்தை நோக்கி ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

மாணவர்களை கல்வித்தரத்தில் மேம்படுத்தும் வகையில் அவர்களை ஆரம்ப வகுப்புக்களில் இருந்தே சரியான முறையில் கட்டியெழுப்ப வேண்டும். மாணவர்களின் எதிர்கால நலன் கருதி சிந்தித்து செயற்பட வேண்டியவர்களாய் உள்ளோம்.

இப்பாடசாலையைத் தொடர்ந்து வீழ்ச்சி நிலையில் விட்டுவிட முடியாது. மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் அதனை எம்மால் மட்டுமே செய்ய முடியும். இப்பாடசாலைக்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் அதே வேளை மலசல கூடங்கள் அமைப்பதற்கான நிதியொதுக்கீடு செய்வதற்கான ஒழுங்குகள் உடனடியாக மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

முன்பதாக பாடசாலையின் பல்வேறு தேவைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன், பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடினார். இக் கலந்துரையாடலில், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்[illegible] விந்தன், வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவர் செல்வவடிவேல் மற்றும் கல்விச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 154 | திகதி 2013.05.17 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

08 12 13 63 F (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 10,638,120/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 189 | 189,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 360 | 360,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8591 | 515,460/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4532 | 181,280/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 113378 | 2,267,560/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16401 | 328,020/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 10,638,120/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,141,320/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 10,859,020/-

2013.05.21ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/2758) web : www.dlb.lk


# மண்டைதீவுப் பகுதிக்கு குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கு வேலணை பிரதேச சபையினால் பௌசர் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

கிழமைக்கு மூன்று நாட்களுக்கு இவ்வாறு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

தற்சமயம் கோடை கால வெய்யில் அதிகரித்திருக்கும் சூழலில் இந்தப் பகுதிக்கான குடிநீரின் தேவையும் அதிகரித்துள்ளது. அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் இருந்து மண்டைதீவுக்கு குழாய் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டுவரும் சூழலில் அந்த நீர் வழங்கல் அப்பகுதி மக்களுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால் இவ்வாறு பௌசர் மூலமாகவும் குடிநீர் விநியோகிக்கப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு விநியோகிக்கப்படும் குடிநீருக்கு குறைந்த அளவு கட்டணமும் பிரதேச சபையினாரால் அறவிடப்பட்டுவருகிறது. (பா)

# சடலங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் வெவ்வேறு சம்பவங்களில் மரணமடைந்த இரண்டு இளம் பெண்களின் சடலங்கள் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டன.

மயிலணி வடக்கு சுன்னாகம் பகுதியில் தூக்கிலிட்டு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படும் மதிவாணன் தர்சினி (வயது 27) என்ற பெண்ணின் சடலமும், தெல்லிப்பழைப்பகுதியில் நடைபெற்ற மற்றைய சம்பவத்தில் வெளிநாட்டில் இருந்து வந்திருந்து நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்த விஜியராசா சோபிதா (வயது 33) என்ற பெண்ணின் சடலமும் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விரு பெண்களும் திருமணம் முடித்தவர்கள் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனையை அடுத்து சடலங்கள் நேற்று பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (பா)

## அறிவித்தல்

190 ஆம் கட்டை, நுணாவில் மேற்கில் இயங்கும் டிஷ்னா மகளிர் வாழ்வாதார பயிற்சி நிலையத்தினரால் டிஷ்னா உற்பத்தி - இளைய தலைமுறையினருக்கான வாழ்வாதார பயிற்சி நிலையம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட கடிதத்தலைப்பில் (Letter Head) ரஞ்சனா நவரத்தினம் என்ற எனது பெயரும், பதவிப்பெயரும், எனது அனுமதியின்றி எனக்கு அறிவிக்காமலே Chair Person ஆகக் குறிப்பிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனக்கும், இந்நிறுவனத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. எனவே இக்கடிதத் தலைப்பை உபயோகித்து இந்நிறுவனத்தினர் இதுவரை கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள கடிதத் தொடர்பாடல்கள், நிதி தொடர்பான நடவடிக்கைகள் எவற்றிற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

ரஞ்சனா நவரத்தினம், உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், தென்மராட்சி.

(R/182)

# மது, இறைச்சிக்கடைகள் மூடுமாறு அறிவுறுத்து

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானக் கடைகளை மூடுவதற்கும், சிறப்பு அங்காடிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும், ஊன் அறுக்கும் நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட்ட கூடங்கள், இறைச்சிக்கடைகள் ஆகிய அனைத்தினையும் மூடுவதற்கு சிறப்பு அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தபட்ட அனைவரையும் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் கேட்டுக்கொண்டுள்ளதாக யாழ். உதவி மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

# பொதுக்கூட்டம்

(வேலணை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினது வருடாந்தப்பொதுக்கூட்டமும், கிளையினது நிர்வாகத்திற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டமும் இன்று காலை 10 மணியளவில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி வீதியில் அமைந்துள்ள அகவொளி உளவளத்துணை நிலையத்தில் யாழ்.கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (05)



கைத்தொழில் வர்த்தக அமைச்சினதும் OURD நிறுவனத்தினதும் உதவியுடன் தண்ணீரூற்று பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தை ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கனகரத்தினம், முல்லைத்தீவு படைத்தலைமையக அதிகாரி ஆகியோர் இணைந்து நாடாவெட்டித் திறந்துவைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (125)

## அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கு நிலுவைப் பணக் கொடுப்பனவு

(வடவரணி)

வரணி வடக்குப்பிரதேசத்தில் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான மூவாயிரம மாதாந்த ஓய்வூதியம் தற்போது ஜனவரி மாதத்தில் இருந்து மே மாதம் வரையான 5 மாத கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா காசோலை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகளை வங்கிப்புத்தகத்துடன் வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை சமூக சேவைப்பகுதி, பாதிக்கப்பட்டவர்களுக்கு பல வழிகளில் வாழ்வாதார உதவிளை வழங்கி தமது சேவையை செய்து வருவது பாதிக்கப்பட்டவர்களுக்கு பெரும் உதவியாக இருப்பதாக பயனாளிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (150)

# வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர் உள்ளதா?

## விழிப்புடன் இருக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது வாக்குரிமையை நாமே வெளிக்கொண்டுவர வேண்டும். வாக்காளர்கள் இடாப்பில் எமது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதா? போன்ற விடயங்களில் அக்கறை கொளள வேண்டும்.

பின்னர் தேர்தல் தினத்தில் வந்து எனது பெயர் இடாப்பில் இல்லை. இதில் மோசடி இருக்கின்றது என எம்மில் சிலர் பிரச்சினைகள் எடுக்கின்றனர். இதனை விடுத்து தகுந்த நேரத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

இதற்கென வரும் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தேர்தல் திணைக்கள பிரதி ஆணையாளர் எம்.எம்.முகமட் தெரிவிததார்.

ஞானம்ஸ் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 2013 ஆம் ஆண்டிற்கான தேர்தல் இடாப்பு மீளாய்வு இடம்பெற்று வருகின்றது. தேர்தல் திணைக்களத்தினால் ஜூன் முதலாம் திகதி ஒரு புத்தூக்கம் கொண்ட ஒரு முக்கிய நாளாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்படவுள்ளது. எல்லாவற்றுக்கும் ஒரு தினம் இருப்பது போல வாக்காளர்களுக்கான தினமாக ஜூன் முதலாம் திகதி முன்மொழியப்பட்டுள்ளது.

அன்று வாக்காளர்களை விழிப்புணர்வு அடையச் செய்யும் வகையில் ஊர்வலங்கள், வீதிநாடகங்கள் சொற்பொழிவுகள் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி வாக்காளர்கள் இவ்வாக்குரிமையை இழக்காத வகையில் தமது பதிவுகளை சரியான நேரத்தில் சரியான இடத்தில் மேற்கொள்ளுவதன் மூலம் தேர்தலில் இடம்பெறக்கூடிய முறைகேடுகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

தேர்தல் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் மக்களுக்கும் சென்றடைய ஊடகங்கள் உதவ வேண்டும் என்றார். (இ)

## பனம்பொருட்களுக்கு அதிக கிராக்கி

(வடவரணி)

தென்மராட்சிப் பகுதிப் பொதுச் சந்தைகளில் தற்போது பனம் பொருட்கள் (புழுக்கொடியல் 80 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டு 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒடியல் 60 முதல் 70 ரூபாவிறகு வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகிறது.

கடந்த காலங்களில் புழுக்கொடியல் வகை 400 ரூபா விற்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது தென்னிலங்கை வியாபாரிகள் நேரடியாக இங்கு வந்து தமது தேவைக்கேற்ப அளவு கொள்வனவு செய்து கொண்டு செல்வதைக் காண முடிகிறது. (150)

## நிரந்தர வைத்தியர் இன்மையால் சிகிச்சை பெறுவதில் சிரமப்படும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாமையால் இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் ஏமாற்றதுடன் சிகிச்சை பெறமுடியாது திரும்பிச் செல்லும் அவல நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கு கடமையாற்றும் வைத்திய அதிகாரி செம்மலை வைத்திய சாலையிலும் கடமையாற்றுவதால் முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாது சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பிட்ட நேரத்திலே நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுவதால் செல்வபுரம், குமிழமுனை, முள்ளியவளை போன்ற தூர பிரதேசங்களில் இருந்து வரும் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாது திரும்பிச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ் வைத்தியசாலையில் நாளாந்தம் 100 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக வரும் நிலையில் நிரந்தர வைத்தியர் இல்லாமையால் தாம் வேறு வைத்திய சாலைக்கு சென்றே சிகிச்சை பெற வேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இப்பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியர் ஒருவரை நியமிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேணடும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## பொதுக்கூட்டம்

(வடவரணி)

வடவரணி கூளாநின்றபுலத்து முருக மூர்த்தி ஆலய உற்வ கால வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று நண்பகல் 12 மணியளவில் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு விழா உபயகாரர்கள் மற்றும் அடியார்கள் நலன் விரும்பிகளை சமூகம் அளிக்குமாறு ஆலய நிர்வாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (150)

# காணி சுவீகரிப்பு விவகாரம்; பிரதேச சபையில் சலசலப்பு

(கரணவாய்)

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அபிவிருத்தி சார் வேலைத்திட்டங்கள்,நில அபகரிப்பு தொடர்பாகவும் மிகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதில் முக்கிய விடயமாக நில அபகரிப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது சபையின் ஆளும் கட்சியான கூட்டமைப்பு உறுப்பினர் க.பரஞ்சோதி அரசாங்கத்தின் நில அபகரிப்பை கண்டிப்பதாக கண்டனத்தீர்மானத்தை சபையில் முன்வைத்தார்.

இதனை ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதன் போது சபையில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இச்சபைக்கூட்டத்தில் கூட்டமைப்பு உறுப்பினர் மதியரசன் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வரும நிலையில் தான் தமிழ்த்தேசியப்பற்று உள்ள மக்கள் முன்னணி அமைப்பொன்றை ஆரம்பிக்க விருப்பதுடன் புதிய வடிவத்தில் இதன் மூலம் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இதன்மூலம் தமிழ் மக்களுக்கு விளக்கப் படுத்துவோம் என அவர் தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் நெல்லியடி புதிய சந்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை சபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். (18)

## இந்திய வீட்டுத்திட்டப் பணிகள் மும்முரம்

(வளலாய்)

வளலாய் கிராம மக்களுக்கு இந்தியன் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டப் பணிகளை பயனாளிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த திட்டமானது ஆறு மாதகாலத்திற்குள் நிறைவடையவுள்ளதாகவும் இவற்றுக்கான கொடுப்பனவுகள் கட்டம் கட்டமாகவே வழங்கப்பட்டு வருவதுடன் பயனாளிகள் வீட்டைக் கட்டி முடிப்பதில் கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.

முதற்கட்டப்பணிகள் நிறைவடைந்ததும் அடுத்த பயனாளிகள் தெரிவு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

## ஊடகக்கல்வி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களமும், யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய தொடர்பாடலும் ஊடகக்கல்வி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான 180 நாள் சான்றிதழ் கற்கைநெறி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் விசாகரூபன், பல்கலைக்கழக ஊடக மையத்தின் பணிப்பாளர் தேவானந் வடமாகாண ஊடக கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் லெனின் அறிவழகன் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடக வளவாளர் இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் 30 ஆசிரியர்கள் பயிற்சியாளர்களாக இணைந்துள்ளனர். இதற்கான பாடத்திட்ட ஒழுங்கமைப்பை இராஜேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

மற்றவர்கள் உங்களைப் புகழவேண்டுமென்று நீங்கள் ஆசைப்பட்டால், நீங்கள் அனைவரையும் புகழ்ந்து பேசி வருவதைப் பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

*- ஜான்க்ரியோடோம்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இன்று நடக்கக் கூடியதைக் கவனி!

நாம் உணர்ந்துகொள்ள மறுக்கும் யதார்த்தங்களில் ஒன்று, எதையும் ஒரே சமயத்தில் பரிபூரணத்துவம் வாய்ந்த முழுமையாகப் பெற்றுவிட முடியாது என்பது. அப்படி முழுமையாகத் தந்தால்தான் எடுத்துக்கொள்வோம் என்று கூறுவதை எதையும் கிடைக்கவிடாமல் பார்த்துக்கொள்கிற சதி நோக்கமாகவே கொள்ள வேண்டும்.

இருட்டில் ஒரு நெடும்பயணம் காரில் போக வேண்டி இருப்பதாக வைத்துக் கொள்வோம். அத்தனை தூரமும் தெருவிளக்குகள் இருந்தாக வேண்டும் என்பதில்லை. காரின் முன் விளக்குகள் சரியாக எரிந்தால் போதும். அத்தனை தூரத்தையும் சிரமம் இல்லாமல் கடந்து விடலாம். காரின் முன் விளக்குகளால் சில அடி தூரம் தான் வெளிச்சம் தர முடியும் என்பதால் பயணக் கடைசி வரை தெருவிளக்கு எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கோரிக்கை எப்படி நகைப்பிற்கிடமாகுமோ, அப்படித் தான் எதிர்காலம் முழுவதற்கும் தயார்படுத்திக் கொள்வதும்.

இன்று என்ன யதார்த்தமோ அதைப் பெற்றுக்கொண்டு படிப்படியாக முன்னேறிச் செல்வதே நாம் விரும்பியதைச் சென்றடைவதற்கான வழி. தோமஸ் கார்லைல் என்ற அறிஞர் சொன்னார். "நம்முடைய முக்கிய வேலை தூரத்தில் மங்கலாகத் தெரிவது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதல்ல, நம் முன்னால் இருப்பது என்ன என்று தெரிந்து அதை சிறப்பாகச் செய்வது தான்".

இன்றைய காலத்தை நாம் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டுதான் எதிர்காலம் மேலும் சிறப்பாய் உருவாக ஆவன செய்ய முடியும். இன்று எது சாத்தியமோ அதைத் தேடுவதை விடுத்து, எதிர்காலத்துக்குரியது எல்லாமும் இன்றே நடந்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருப்பது வெற்றுப்புலம்பலே ஒழிய வேறில்லை. இந்த நாளில் இந்த கணத்தில் நாம் செய்வதை வைத்துத் தான் நேற்றைய அனுபவத்திற்கும், நாளைய நடப்பிற்கும் நாம் சிறப்பை ஏற்படுத்த முடியுமே தவிர அவற்றைக் குறித்த வருத்தங்களாலும் கவலைகளாலும் அல்ல. அப்படி சாத்தியமான வழியில் செயற்படுவதை விட்டு விட்டு வருத்தங்களாலும், கவலைகளாலும் கழிக்கப்படும் காலங்கள் வீணடிக்கப்படுபவையே.

எப்படிப் பார்த்தாலும் நம்மால் செயல்பட முடியக்கூடிய காலம் நிகழ்காலம் மட்டுமே. நிகழ்காலத்தில் சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் புலம்பலிலேயே கழிப்பது இருக்கும் நிலைமையை மாறவிடாமல் வைத்திருக்கும் முயற்சியே. புலம்பலிலும், வருத்தங்களிலும் நிலைமை மேலும் மோசமாகுமே தவிர எதுவும் மாறி விடாது, தீர்வும் கிடைக்காது.

நம் விடியலுக்கான தீர்வு இன்று நாம் செய்யக்கூடியதை அறிந்து செய்வதில்தான் உள்ளது. இன்றிருக்கும் நிலையை மாற்ற உண்மையில் விரும்புபவர்கள், நாளைய முழுமையான தேவையைப் பற்றியே வெறுமே பேசிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அதற்காக இன்று வைக்கக்கூடிய முதல் அடியை எடுத்துவைப்பதைப் புறக்கணிக்க மாட்டார்கள்.

இதுபற்றி மகாகவி காளிதாசனின் சிறந்த கவிதை ஒன்றுண்டு. ஆங்கிலம் வழித் தமிழாக்கினால் அந்தக் கவிதை சொல்வது இதைத்தான்:

"நேற்று என்பது வெறும் கனவு
நாளை என்பதோ கற்பனை மட்டுமே
இன்று சிறப்பாக வாழ்ந்தால்
அது நேற்றைய கனவையும் இனிமையாக்கும்
நாளைய தினத்தையும் நம்பிக்கைக்குரியதாக்கும்
அதனால் இன்றைய தினத்தைக் கவனி
அதில் தான் விடியலுக்கான தீர்வே உள்ளது"

- ஆசிரியர்

# வட்டுக்கோட்டையில் கிடைக்கும் குடிநீர் மனித பாவனைக்கு உகந்ததா?

## – அதிகாரிகளை அழைத்து ஆய்வு

வட்டுக்கோட்டையில் விநியோகிக்கப்படும் குடிநீர் மனிதபாவனைக்கு உகந்ததா என்று கண்டறியும் ஆய்வுக் கூட்டம் ஒன்று வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் ஏற்பாட்டில் துறைசார்ந்த அதிகாரிகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அப்பகுதிக்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வட்டு.தெற்கு முதலி கோவிலடிப் பகுதியில் வேள்ட் விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வலி.மேற்கு பிரதேசசபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குழாய் வழிக் குடிநீர் விநியோகத்தின் மூலம் வழங்கப்படும். குடிநீர் உவர்த் தன்மையுடையதெனவும் அந்நீரைக் குடிப்பதற்கு பயன்படுத்துவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்ற வகையிலும், இவ்விடயம் அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வரபபட்டது.

இதனைத் தொடர்ந்து தொடர்புடைய அரச அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் பிரதேச சபையினர் ஆகியோரை ஒன்றிணைத்து நாடாளுமன்ற உறுப்பினரால் விசேட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் நீர் உடனடிப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது.

முடிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரிசோதனைக்கமைவாக நீர் குடிநீருக்கேற்ற தன்மையைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் காலநிலை மாற்றத்திற்கேற்ப நீரின் தன்மைகள் மாற்றமடையும் என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் தொடர்ச்சியாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு விநியோகிக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

வேள்ட் விசன் நிறுவனத்தின் சுமார் 9.5 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் இத்திட்டம் சுமார் 800 பயனாளிகளின் குடிநீர்ப் பாவனையை இலக்காகக் கொண்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் மீள்குடியேற்றப்பட்ட பொன்னாலை, காட்டுப்புலம் ஆகிய பகுதி களுக்கான குடிநீர் விநியோகத்தினையும் பிரதேசசபையினர் சீராக வழங்க வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினரால் பணிக்கப்பட்டது.

அத்தோடு குறித்த பகுதிகளிலும் நிரந்தர குடிநீர் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான குடிநீர்க் கிணற்றினை சபையின் ஆளுகைக்குக் கொண்டுவர சபை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வகுமார், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி தபேந்திரன், வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் சாந்தா, சங்கானை பிரதேச செயலக பிரதிதிட்டப் பணிப்பாளர் சிவகுமார், வேள்ட் விசன் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் றொசாய்றோ, சுகாதார சேவைகள் அதிகாரி நந்தகுமார் ஆகியோரும் வட்டு.தெற்கு பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

# சிறுவன் மீது பலாத்காரம் பௌத்த பிக்கு கைது

(கொழும்பு)

13 வயது சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 58 வயதான பிக்கு ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.கெப்பத்திகொல்லாவ பகுதியிலுள்ள விகாரையொன்றின் தேரரே இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவன் மதவழிபாட்டிற்காக விகாரைக்கு சமூகமளித்த சந்தர்ப்பத்தில் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.சிறுவனின் பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்து, சம்பந்தப்பட்ட பிக்கு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் கூறுகின்றனர்.

# ஒரேகுரலில் பேசுவதற்கு தயாராகி விட்டனரா முஸ்லிம்கள்?

(கொழும்பு)

சிங்கள அடிப்படை வாதம் தலையெடுத்தமையாலேயே முஸ்லிம் தலைவர்கள் இப்போது ஒரே குரலில் பேச ஆரம்பித்துள்ளனர். என்றும் அதற்காக பொதுபல சேனாவிற்கு முஸ்லிம்கள் நன்றி செலுத்தவேண்டும் என சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார பதில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக காத்தான்குடி மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நகர முதல்வர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்திய பிரதியமைச்சர்,

பொதுபலசேனாவின் வருகையினால் முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபட்டிருக்கின்றன. அதற்காக பொதுபல சேனாவிற்கு முஸ்லிம்கள் நன்றி செலுத்தவேண்டும். பல்வேறு விமர்சனங் களுக்கும் சமூகத்தின் மத்தியில் எழும் கேள்வி களுக்கும் மத்தியில் தான் நாங்கள் சமூகத்திற்காக பணிசெய்கின்றோம். அமைச்சுப் பதவிகள் ஒன்றும் எங்களுக்குப் பெரிதல்ல என்றார்.

# யானை மருத்துவத்துக்கு புத்துயிர் அளிக்க ஏற்பாடு

(கொழும்பு)

யானை மருத்துவ நிபுணர்களுக்கு உற்சாக மூட்டும் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. யானைகளுக்கு சிகிச்சையளிக்கும் பாரம்பரிய வைத்தியர்களை பதிவு செய்வதற்கான விசேட திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு ஆயுர்வேத திணைக்களம் தீர்மானித்துள்ளது.பாரம்பரிய சிகிச்சை முறையை பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் பாலித வீரகோன் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பாரம்பரிய வைத்தியர்களை கொழும்பிற்கு வரவழைத்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

யானைகளுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பில் வைத்திய சபையின் கீழ், பாரம்பரிய வைத்தியர்களை பதிவுசெய்வதற்கான வழிமுறையொன்றை ஏற்படுத்திக் கொள்ள, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் தலைமையில் ஏற்கனவே யோசனை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# தமிழ் மக்களை ஏமாற்றும் இன்னொரு நாடகக் காட்சி

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இலங்கைக் குள்ளேயே தீர்வைக்காண வேண்டுமேயொழிய சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை அர்த்தமற்றதென்பது ஒரு யதார்த்தம். இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வைப் படிப்படியாக அடைய வேண்டுமேயொழிய ஒரே தடவையில் பெறுவது சாத்தியமில்லை என்பது மற்றைய யதார்த்தம். சிங்கள மக்களில் கணிசமானோரின் ஆதரவு இல்லாமல் அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்பது இன்னொரு யதார்த்தம். இந்த யதார்த்தங்களைப் புறந்தள்ளும் எந்தத் தீர்வுத் திட்டமும் அரசியல் தீர்வுக்கான ஆலோசனையாக இருக்காது. அது மக்களை உணர்ச்சிவசப்படுத்தி வாக்குச் சேகரிக்கும் அரசியலாகவே இருக்கும். இந்த அரசியலின் பிரதான இலக்கு நாடாளுமன்றக் கதிரைகளேயொழியத் தமிழ் மக்களின் விமோசனமல்ல.



■ சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் முயற்சியில் சுரேஷ் அணியின் கடைசித் துரும்பும் பிசு பிசுத்துப் போய்விட்டது. மன்னார் ஆயருக் கூடாகத் தமிழரசுக் கட்சித் தலைமையைச் சம்மதிக்க வைப்பதற்கு எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்யவேண்டும் என்பதில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த மற்றைய நான்கு கட்சிகளும் இவ்வளவு பிரயத்தனம் எடுப்பதற்கான காரணம் என்ன என்ற. கேள்வி முக்கிய மானது. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தால்தான் தமிழ் மக்களின் விமோசனத்துக்காகச் செயற்பட முடியும் எனக் கூறினால் அது காதில் பூச்சுற்றும் செயல். தனிக் கட்சியாகப் பதிவு செய்தாலும் செய்யாவிட்டாலும் தமிழ் மக்களின் விமோ சனத்துக்காகச் செயற்படுவதற்கு எந்தத் தடையும் இல்லை. இது தமிழ் மக்களின் பெயரால் நடத்தும் சுயநல அரசியலின் இன்னொரு அம்சம்.

இந்த நான்கு கட்சிகளின் தலைவர்களும் தமிழரசுக் கட்சியின் மேலாண்மைக்குக் கட்டுப்பட விரும்பவில்லை. அதேநேரம் பிரிந்து சென்று தேர்தலுக்கு முகங்கொடுப் பதன் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தொடர்பாக "ரிஸ்க்" எடுக்கவும் தயாராக இல்லை. அதனால்தான் தமிழ் மக்கள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பு நடாத்திய வர்களைப் போல, கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதுதான் தமிழ் மக்களின் விருப்பம் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். தமிழ் மக்களுக்கு இதில் கொஞ்சமும் அக்கறை இல்லை. அவர்களின் அக்கறையெல்லாம் தங்களால் தெரிவு செய் யப்பட்ட தலைவர்கள் தங்கள் பிரச்சினை களைத் தீர்ப்பதற்குப் பதிலாக வேறு விட யங்களில் காலத்தைக் கடத்துகின்றார்களே என்பதுதான்.

கூட்டமைப்பைப் பதிவு செய்வது பற்றிய சாதகமான முடிவு மன்னார் கூட்டத்தில் எடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் தலைப் புச் செய்தி எழுதுவதற்குத் தயாராக இருந்த சில பத்திரிகைகள் இறுதித் தீர்வைத் தயா ரிப்பதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்ட செய்தியைப் பெரிதாக்கி ஏமாற்றத்துக்குப் பரிகாரம் தேடிக் கொண்டன.

சிவில் சமூகத்துக்கும், தமிழ்க் கட்சிகளுக்கு மிடையே மன்னாரில் நடைபெற்ற கூட்டத்தில் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வைத் தயாரிப்பதற்காக மூவர் கொண்ட குழு வொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சிவில் சமூகம் யார் என்பது பலருக்கு மறந்துபோயிருக்கலாம். சில மாதங்களுக்கு முன் பத்திரிகைகளில் பெரிதாக அடிபட்ட பெயர்தான் இந்தச் சிவில் சமூகம். யதார்த் தத்துக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கொண்ட சிலர் ஒன்றாகச் சேர்ந்து தங்களைச் சிவில் சமூகமென அழைத்துக் கொண்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனை கூறும் பாவனையில் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவான அறிக்கைகளை அடுத்தடுத்துப் பத்திரிகைகளில் வெளியிட்டவர்கள்தான் இந்தச் சிவில் சமூகத்தினர் என்பதைத் தமிழ் மக்கள் ஒருவேளை மறந்திருக்கலாம்.

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு என்பதில் தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரையிலான தமிழ்த் தலைவர்களுக்கு நிரந்தரமான நிலைப்பாடு இல்லை என்பது அடிக்கடி நிரூபணமாகியிருக்கின்றது. இதன் இன்னொரு காட்சிதான் இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் மூவர் குழு.

சமஷ்டியே இறுதித் தீர்வு என்று முதலில் சொன்னார்கள். பின்னர் சமஷ்டியைக் கைவிட்டுத் தனிநாடுதான் இறுதித் தீர்வு என்றார்கள். கொஞ்சக் காலம் தனிநாடு பற்றிய கதையே இல்லாமல் சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்துக்குப் பூரண ஆதரவு வழங்கினார்கள். அந்தத் தீர்வுத் தீட்டம் "எங்கடை ஆள்" நீலன் திருச்செல்வத்தின் மூளைக் குழந்தை என்று பெருமையும் பேசினார்கள். இந்தக் காலத்தில் சில தமிழ்த் தலை வர்கள் எக்கச்சக்கமான சலுகைகளை அனுபவித்தார்கள் என்பதையும் சொல் லாதிருக்க முடியாது. திடீரென அதிகாரப் பகிர்வு இவர்களுக்குக் கசந்தது. மீண்டும் தனிநாட்டு அரசியலுக்குப் போனார்கள். புலிகளின் தோல்விக்குப் பின் எந்தவொரு தீர்வுத் திட்டமும் இல்லாமல் வெறும் வாய் மென்றார்கள். இப்போது மாகாண சபைத் தேர்தல் நடக்கப்போகின்றது என்றவுடன் இறுதித் தீர்வைத் தயாரிப்பதற்காக ஒரு குழுவை நியமித்திருக்கின்றார்கள்.

ஒரு நாட்டில் சிறுபான்மையினராக வாழும் இனத்தின் அரசியல் பற்றும் சமுக உரிமைகளுக்கான போராட்டத்தைப் பொறுப்பேற்றிருப்பவர்கள் நிரந்தரமான இலக்குடன் செயற்பட வேண்டும். அதை விட்டுக் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கொள்கையாக மாற்றிக் கொண்டு செல்வது உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்ப. தற்கான வழியல்ல. தலைவர்கள் தங்கள் தவறுகளை மூடிமறைத்து மக்களை ஏமாற்றுவதற்கான தந்திரமே இது. நிரந்தரமான இலக்கு இல்லாத போராட்டம் பாதிப்புகளைத் தருமேயொழிய எந்தவொரு முன்னேற்றத்தையும் தராது. இதனால் மக்கள் துன்பங்களை அனுபவிக்க தலை வர்கள் வெற்றிகளையும், வசதிகளையும் அனுபவிப்பார்கள். தமிழ் மக்கள் கொஞ்சம் பின்னாலே திரும்பிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்தவர்கள் சாதாரண மக்கள். தலைவர்கள் நாடாளுமன்றப் பதவி களைப் பாதுகாத்துக் கொண்டு அதன் மூலம் கிடைக்கும் வசதிவாய்ப்புகளை அனுபவிக் கின்றார்கள். இப்போது இன்னொரு இறுதித் தீர்வை முன்வைத்து மக்களை ஏமாற்றுவ தற்கான நாடகமே மூவர் குழுவின் நியமனம்.

இந்த மூவர் குழு தமிழ் மக்களுக்கு விமோசனத்தைத் தருமா என்ற கேள்விக்கு இனிவருவோம்.


இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைக்கும்போது ஆவணப் பிரபல்யத்துக்காக அல்லாமல் நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வாக இருக்கவேண்டியது அவசியம். நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாட்டுத் தீர்வைத் தமிழ்த் தலைமை முன்வைத்ததன் பாதகமான விளைவுகளுக்கு இன்றும் தமிழ் மக்கள் முகங்கொடுக்கின்றார்கள். உறவுகளையும், சொத்துக்களையும் இழந்தது மாத்திரம் பாதிப்பல்ல. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பாதிப்புகள் என்று, இன்று கூட்டமைப்புத் தலைவர்கள் பட்டியல் போடும் அத்தனை விடயங்களும் இனப்பிரச்சினையின் தீர்வுக் காக இவர்கள் பின்பற்றிய நடைமுறைச் சாத்தியமற்ற கொள்கையின் விளைவுகளே. வெகுஜன ஆர்வத்தையும் ஆதரவையும் எதிர்பார்த்து நடைமுறைச் சாத்தியமற்ற தீர்வை மூவர் குழு சிபாரிசு செய்யுமே யானால் தனிநாட்டுக் கொள்கையின் துயரப் படலம் மீண்டும் அரங்கேறுவதாக அமைந்துவிடும்.

சில யதார்த்தங்களைப் புறந்தள்ளி எடுக்கப்படும் எந்த முடிவும் பலன் தரப்போவதில்லை. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளேயே தீர்வைக்காண வேண்டுமேயொழிய சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை அர்த்தமற்றதென்பது ஒரு யதார்த்தம். இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வைப் படிப்படியாக அடைய வேண்டுமேயொழிய ஒரே தடவையில் பெறுவது சாத்தியமில்லை என்பது மற்றைய யதார்த்தம். சிங்கள மக்களில் கணிசமானோரின் ஆதரவு இல்லாமல் அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்பது இன்னொரு யதார்த்தம். இந்த யதார்த்தங்களைப் புறந்தள்ளும் எந்தத் தீர்வுத் திட்டமும் அரசியல் தீர்வுக்கான ஆலோசனையாக இருக்காது. அது மக்களை உணர்ச்சிவசப் படுத்தி வாக்குச் சேகரிக்கும் அரசியலாகவே இருக்கும். இந்த அரசியலின் பிரதான இலக்கு நாடாளுமன்றக் கதிரை களேயொழிய தமிழ் மக்களின் விமோசன மல்ல. இந்த மூவர் குழு மேற்கூறிய யதார்த்தங்களை நிராகரிக்குமேயனால் அதன் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்போவது துயரங்களின் தொடர்ச்சியேயொழியத் தீர்வல்ல.

உடனடியாகச் சாத்தியமான தீர்வை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து கட்டம் கட்டமாக முன்னேறிச் சென்று இறுதித் தீர்வை அடையும் நடைமுறைதான் தமிழ் மக்களின் விமோசனத்துக்குச் சாத்தியமான ஒரேயொரு வழி. இந்த நடைமுறையை நிராகரிப்பது தமிழ் மக்களின் நலனை நிராகரிப்பதற்குச் சமன்.

# கிழக்கில் இந்திய வீடமைப்பு அரங்கேறிய மோசடிகள் என்ன?

## ஆரம்பப் பணிகள் இடை நிறுத்தம்



(கொழும்பு)

கிழக்கில் இந்திய வீடமைப்புக்கான பயனாளிகள் தெரிவில் குளறுபடிகள் நடந்துள்ளதா என்ற ஐயம் உருவாகியுள்ளது.

இதனால் ஆரம்பப் பணிகள் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்திய உதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவிருந்த முதற்கட்ட வேலைகளுக்கான ஆரம்ப வைபவங்கள் பிற்போடப்பட்டுள்ளன. இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்த ஆரம்ப வைபவங்கள் எதிர்வரும் புதன்கிழமை வரை பின்போடப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக ஆரம்பவைபவங்கள் பற்போடப்பட்டுள்ளதாக செங்கலடி பிரதேச செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்திய உதவி வீட்டுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2000 வீடுகள், அம்பாறை மாவட்டத்தில் 1000 வீடுகள், திருகோணமலை மாவட்டத்தில் 1000 வீடுகள் என்ற எண்ணிக்கையில் மொத்தமாக 4000 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் முதற்கட்ட வீடமைப்புத் தொகுதிகளுக்கான அடிக்கல் நாட்டும் வைபவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள பெரியபுல்லுமலை (தமிழ் கிராமம்) 109 வீடுகள், உறுகாமம் (முஸ்லிம் கிராமம்) 103 வீடுகள், மங்களாகம (சிங்கள கிராமம் ) 89 வீடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

குறித்த வைபவங்களில் இலங்கைக்கான இந்திய உயர் தூதுவர் அசோக் கே காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்வார்கள் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு மூன்று இடங்களிலும் அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

முதற்கட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு ஏற்கனவே தங்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக மட்டககளப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்களும் தங்களின் கவலையையும் ஆட்சேபனையை வெளிப்படுத்தியும் இலங்கைக்கான இந்திய தூதுவருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தனர்.

இதன் காரணமாகவே முதற்கட்ட வீடமைப்பு வேலைகளுக்கான ஆரம்ப நிகழ்வு இறுதி நேரத்தில் இடைநிறுத்தப் பட்டிருக்கிறது.

## சிங்கள வார இதழ் ஆசிரியர் மீது விசாரணை

(கொழும்பு)

ஜனரல என்ற ஞாயிறு சிங்கள பத்திரிகையின் ஆசிரியரைப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்காக அழைத்துள்ளனர்.

சந்தன சிறிமல்வத்த என்ற பத்திரிகையின் ஆசிரியர், புலனாய்வுப் பிரிவிற்கு வாக்குமூலமொன்றை அளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வார பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்று தொடர்பில் விசா ரணை நடாத்தப்படவுள்ளது.

புலனாய்வுப் பிரிவிற்கு சமூகமளிக்குமாறு சிறிமல் வத்தவிற்கு புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும் பத்திரிகையின் அச்சுப் பணிகள் காணப்படுவதனால் புலனாய்வுப் பிரிவிற்கு அவசரமாக ஆஜராக என்னால் முடியாது எனப் பத்திரிகை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றிய தடயவியல் ஆய்வு இன்னும் தொடர்கிறது

(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பான தடயவியல் ஆய்வுக்கு இந்தியாவின் உதவி பெறப்பட்டிருக்கிறது.

பிரபாகரனின் கைவிரல் அடையாள மாதிரிகள் இந்தியாவிடம் இருந்து பெறப்பட்டிருக்கிறன.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தப்பிச் சென்றதாக வெளியான தகவல்களில் உண்மையிலலை என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபாகரனின் கைவிரல் அடையாள சாட்சியங்களின் மூலம் உயிரிழந்தமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கைவிரல் அடையாள மாதிரி



களும், நந்திக்கடல் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட பிரபாகரனின் சடலத்தின் கைவிரல் அடையாள மாதிரிகளும் ஒத்துப் போவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி புலிகளின் மூன்று படகுகளை கடற்படையினர் தாக்கி அழித்ததாகவும், எவரும் தப்பிச் செல்லவில்லை எனவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவிததுள்ளார்.

## தமிழ்த்தேசியவாதம் பேசியதாலேயே சிங்கள அடிப்படைவாத பூதம் கிளம்பியது

(கொழும்பு)

இப்போதும் தமிழ்த்தேசியவாதம் பேசிவருவதாலேயே சிங்கள அடிப்படைவாதம் மேற்கிளம்பியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

இந்நாடு பௌத்த - சிங்கள வர்களுக்கே உரிமையானது எனவும், அரச விழாக்களில் பௌத்த மதவழிபாடுகளே இருகக வேண்டும் என்றும் ஏனைய மதங்களை அரச விழாக்களில் சம்பந்தப்படுத்தக் கூடாது என்றும் பொதுபலசேனா பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இது இந்நாட்டின் ஐக்கியத்திற்கு விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகும். பொதுபலசேனா சம்பந்தமாக கடந்த முறை இடம் பெற்ற கட்சி தலைவர்களின் கூட்டத்தில் சிறுபான்மைக் கட்சித் தலைவர்களாகிய நாங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்த போது பொதுபலசேனா, ராவணா பலய போன்ற அமைப்புகள் பற்றி கவலைப்படத் தேவையில்லை. அவை வெகு விரைவிலே கலைந்து விடும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இருப்பினும், இன்று இவ் அமைப்புகள் நாளுக்கு நாள் சிங்கள -பௌத்த இனவாதத்தை முன்னிறுத்தி வருகின்றன. இலங்கை பௌத்த - சிங்களவர்களின் நாடென்றும், அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கோரிக்கை விடுகசும் அளவுக்கு செல்கின்றனர்.

இந்நாட்டில் ஜாதி, மதங்கள் இல்லை எனவும், நாட்டின் மீது அன்பு கொண்டவர்களும், நாட்டின் மீது அக்கறை இல்லாதவர்களுமாக இரண்டு இனங்களே இருக்கின்றது என கூறிய ஜனாதிபதியின் கூற்று இன்று கேள்விக் குறியாயுள்ளது.

இப் பொதுபலசேன, தமிழர்களுக்கு சரியான தீர்வை இந்த அரசாங்கம் கொடுக்கவில்லை என்றும் ஊடக அறிக்கையின் மூலமாக வெளிப்படுத்துகின்றது. இது முஸ்லிம் மக்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்துவதற்காக நடாத்தப்படும் நாடகமாகும்.

யுத்தம் முடிவடைந்தவுடன் விட்டுக்கொடுப்புடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தால் ஒரு சில விடயங்களையாவது பெற்றுக்கொண்டு மேலதிக உரிமைகளுக்காக களமிறங்கியிருக்கலாம்.


ஆனால், தமிழ்த் தேசியம் என்ற போர்வையில் நம்மவர்களும், தமிழ் இனவாதத்தை பேசியதனாலேயே பொதுபலசேனா போன்ற இனவாத அமைப்புகள் உருவாவதற்கு காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழ்த்தினப் போட்டிகள் இரத்து கிழக்கு மாணவர்கள் ஏமாற்றம்

(கொழும்பு)

நேற்று திருகோணமலையில் நடைபெறவிருந்த கிழக்குமாகாணத் தமிழ்த்தினபபோட்டிகள் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நேற்றையதினம் திருகோணமலை சேனையூர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய போட்டியில் கலந்துகொள்வதற்காக மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் திருகோணமலைக்குச் சென்றிருந்தனர். இன் நிலையில் திடீரென பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கு அமைய மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டிகளை இரத்துச்செய்வதாக திடீரென அறிவிக்கப்பட்டது. இதனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து சென்ற மாணவர்களும், ஆசிரியர்களும் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.



## எண்ணெய் சுத்திகரிப்பு மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

டுபாயில் இருந்து மசகெண்ணெய் கொண்டுவரும் கப்பல் எதிர்வரும் 20 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தொடரும் என அவர் குறிப்பிட்டார். சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

எதிர்பாராதவிதமாக மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதில் தாமதம் ஏற்பட்டதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கூட்டுத்தாபனத்தின் இந்தச் செயற்பாட்டால் நாட்டில் எரிபொருள் சிக்கல் நிலை ஏற்படும் என எரிபொருள் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதனால் எரிபொருட்களின் விலை உயர்வடையக் கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், நாட்டில் போதியளவு எரிபொருட்கள் கையிருப்பில் இருப்பதாக எரிபொருள் கூட்டுத்தாபனம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மொழியில் பௌத்த சிந்தனை

### மீட்சிக்கு வழி பிறக்குமா?



(கொழும்பு)

தமிழ் மொழியின் ஊடாக பௌத்த மதத்தைத் தெளிவுபடுத்த வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தமிழ் மொழியின் ஊடாக பௌத்த மதச் சிந்தனைகளை போதிக்க பௌத்த பிக்குகள் இன்மையினால், தமிழ் மக்கள் பிழையாக வழிநடாத்தப்படுகின்றனர்.

இதனால் பௌத்த மதம் பற்றி அவர்கள் சர்வதேச சமுகத்திடம் பிழையான தகவல்களை எடுத்துச் செல்கின்றனர்.

தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் பௌத்த மத சிந்தனைகளை போதிப்பது மிகவும் அவசியமானது. வடக்கு தமிழ் மக்களிடையே சிங்களவர் பற்றிய பிழையான கருதுகோள்கள் நிலவி வந்தன. அவற்றை முறியடிப்பதற்கு பௌத்த மத சிந்தனைகளைப் போதிக்க வேண்டியது அவசியமானது என பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொல்லிகொட பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பௌதிகவளத்தேவைகள் படிப்படியாகப் பூர்த்தி செய்யப்படும்



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் பாடசாலைகளுக்கான பௌதிக வளத்தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், மாணவர்களின் கல்வியினை உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்ற தார்மீக கடமை பெற்றோர், ஆசிரியர்களையே சாரும்.

இதேவேளை குடும்ப வறுமை மாணவர்களின் கல்வியினை எவ்வகையிலும் பாதிப்படையாத வண்ணம் செயற்பட வேண்டும்.

வறிய நிலையிலுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு சமுகநலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இதனடிப்படையில் சமுர்த்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மாதாந்த உதவுதொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, இவ்வாறான உதவு தொகைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளிற்கான உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை சரியாகப் பயன்படுத்துவதனூடாக கல்வியினை வளர்த்தெடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சிக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் மற்றும் தென்மராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அலெக்சாண்டர் சாள்ஸ், அயற்பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்.

# வண்ணை கேசாவில் வீதி புனரமைப்பு எப்போது?

(குருநகர்)

வண் - வட மேற்கு சிவப்பிரகாசம் வீதியால் கிளைவிடும் கேசாவில் வீதி போக்குவரவுக்கு உதவாத வகையில் மிகவும் மோசமாகப் பழுதடைந்து காணப்படுகிறது.

மழை காலங்களிலும் அயலில் கிணறுகள் இறைக்கும் சமயங்களிலும் வீதியில் பெருவெள்ளம் தோன்றி மேலும் போக்குவரவில் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாநகர சபைக்குரிய மேற்படி வீதி சம்பந்தமாக ஊடகங்கள் மூலம் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தும் இன்னமும் திருத்த வேலைகள் மேற்கொள்ளவில்லை.

1995ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து திரும்பிய பின்பாக 17 ஆண்டுகளாக திருத்த வேலைகள் செய்யாமல் கேசாவில் வீதி இருந்து வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. (68)

## கடையில் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் அல்லையம்பதி துன்னாலை பகுதியில் உள்ள பலசரக்குக் கடையொன்றில் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன், கடையின் மேற் கூரை நட்டுக்களைக் களற்றி உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சில்லறைப் பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இத்திருட்டுச்சம்பவத்தால் அப்பகுதி பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர். (18)

## பாதீனிய ஆக்கிரமிப்பு

(யாழ்ப்பாணம்)


"ஏ9" பிரதான வீதியில் நாவற்குழி, மற்றும் கைதடிப் பகுதிகளில் பாதீனியச் செடியின் பரவல் அதிகமாகக் காணப்படுகிறது.

கைதடி தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாகவுள்ள காணிகளிலும், நாவற்குழியினை அண்மித்த பனை ஆராய்ச்சி நிலையத்தை அண்டிய மற்றும் முன்னரங்கப் பகுதிகளிலும் இப் பாதீனியச் செடியின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

மிகவும் கொடுமையான நோய் போன்ற இப் பாதீனியம் எம் மண்ணின் இயற்கை வளங்களை அழித்து மண்ணையே மலட்டுத் தன்மையாக்கும் சக்தி படைத்தது. எனவே இப் பாதீனிய வளர்ச்சியினை நாம் கட்டுப்படுத்த மக்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இது சம்பந்தமாக பூரண விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவற்றை சிறு செடியாக இருக்கும் வேளையிலே அழித்து விட வேண்டும் என பல விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (43)

## பாடசாலைக்கு நிதியுதவி



(பருத்தித்துறை)

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையினர் வறுமையும் திறமையும் அடிப்படையில் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு 3 இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளனர்.

இதற்கான காசோலையை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபரிடம் கையளித்தார். (01)

## உபதபாலகம் இல்லை சிரமப்படும் பொதுமக்கள்

(தம்பாலை)

தம்பாலை பிரதேசத்திற்கு உபதபாலகம் இல்லாத நிலை உள் ளதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு இவர்கள் வளலாய் தபாலகத்திற்கோ இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அச்சுவேலி தபாலகத்திற்கோ செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, முக்கிய தேவைகளில் ஒன்றாகக் காணப்படும் தபால் சேவை மக்களுக்கு அவசியமானதாகக் காணப்படுகின்றது.

எனவே, குறித்த பிரதேசத்திற்கு உபதபாலகம் ஒன்றை நிறுவினால் தாம் நன்மையடைவதுடன், நேரவிரயத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (85)

# புதிய நிர்வாகத்தெரிவு

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா சனசமுக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. இதில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக க.கோபிகுமார், உபதலைவராக ந.மகீசன், செயலாளராக பூ.இராஜ்பவன், உபசெயலாளராக ப.நிதர்சி, பொருளாளராக பொ.கஜேந்திரன் அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக மா.தருமராசா, மா.திருச்செல்வம், இ.இராஜரூபன், த.கமலஜீவன், சி.துவாரகன், கி.பிரதீபன், யோ.கௌசிகன் போன்றோர் கணக்காய்வாளராக க.சின்னராசா, போசகர்களாக சி.ஸ்ரீராகவன், க.பொன்னையா, செ.தவராசசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (85)

# முரசின் இன்றைய பலன்

(19.05.2013 - ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 05 ஆம் திகதி.
நட்சத்திரம், பூரம் பின்னிரவு 02.09 வரை. திதி. நவமி
மாலை 06.49 வரை. இராகுகாலம் 04.22 -05.52 வரை.
சுபநேரம் 08.52 - 10.22 வரை. சித்தாமிர்தம்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | தகுதி, திறமை வளர்ந்து புகழப்படுவீர்கள். முடியாத வேலை, உங்கள் திறமையால் வெற்றிகரமாக முடியும். தொழில், வியத்தகு வளர்ச்சி. உபரி வரவு. ஆடம்பர செலவுகளில் நாட்டம். புத்திரர் விரும்பியது வாங்கித் தருவீர்கள். |
| ரிஷபம் | எண்ணமும், செயலும் உற்சாகம் பெறும். முன்னர் செய்த முயற்சிகளுக்கும் பலன் வந்து சேரும். தொழில், முன்னேற்றம். சராசரி பணவரவு. புதிதாகத் தொடங்கும் காரியம் வெல்லும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| மிதுனம் | வாழ்வில் வளம்பெற, அனுகூலம் உருவாகும். தகுந்தவாறு பயன்படுத்தி, நன்மை பெறுவீர்கள். தொழிலில் இலாபம் கூடும். வெகுநாள் நினைத்த பொருள் வாங்குவீர்கள். அன்புக்கு உரியவரை உபசரிப்பீர்கள். இல்லறத்தில் நிம்மதி. |
| கடகம் | உத்வேகமுடன் செயல்படுவீர்கள். உங்கள் செயல்கள் பாராட்டு பெற்றுத் தரும். தொழிலில் இலக்கு நிறைவேறும். கொடுக்கல், வாங்கல் முன்னேற்றம். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர், கலைஞர்க்கு சாதனை நாள். |
| சிம்மம் | புதியவருடன், பொது விஷயம் பேசவேண்டாம். சொந்த வேலையை முழுமையாக கவனிப்பது நல்லது. தொழில், இலக்கு நிறைவேறும். குறைந்த பணவரவு. உறவினர் உங்களைப் புரிந்து கொண்டாடுவர். நித்திரையில் இனிய கனவு. |
| கன்னி | பொதுநல எண்ணத்துடன் செயற்படுவீர்கள். மாறுபட்ட கருத்து கொண்டவரும் மரியாதை தருவர். தொழில், வளரும். தாராள பணவரவு. வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். பழைய விவகாரத்தில் சுமுக தீர்வு. குடும்பத்தினர் அன்யோன்யம். |
| துலாம் | நண்பரிடமிருந்து உதவி கிடைக்கும். முக்கிய செயல் ஒன்றை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், அபிவிருத்தி ஏற்படும். வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். உடல் நலம் பலம் பெறும். |
| விருச்சிகம் | பேச்சில் நிதானம் தேவை. வீண் கௌரவத்திற்காக போட்டி, பந்தயம் வேண்டாம். ஆர்வங்களை சொந்தப் பணிகளில் திருப்பிவிடுக. தொழில் நிலை, சுமாரான அளவில். வரவை விட செலவு கூடும். குடும்பத்தில் சிறு சச்சரவு. |
| தனுசு | குடும்ப உறுப்பினர்கள், கூடுதல் பாசத்துடன் நடப்பர். மனதில் நம்பிக்கை கூடும். தொழில், கடுமையாக உழைப்பீர்கள். பணவரவும், நன்மையும். வாகன பயணத்தில் கவனம். மாணவர், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது. |
| மகரம் | மனம், செயலில் பதற்றம் இருக்கும். சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், தாமத கதியில். சேமிப்பு செலவுக்கு பயன்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம். எதிர்காலம் குறித்து கவலையுடன் சிந்திப்பீர்கள். பக்தியில் நாட்டம். |
| கும்பம் | மனதில் இருந்த தயக்கம் விலகும். அதிக நன்மை கிடைக்கும். தொழில், முன்னேற்றம் பெறும். உபரி பண வரவு. உத்தியோகத்தர்களுக்கு பாராட்டும் பதவியும். மாணவர் உயர்வு. உறவினர்களின் வருகையால். குடும்பத்தில் சந்தோஷம். |
| மீனம் | உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். வெகுநாளாக தேங்கியிருந்த வேலை நிறைவேறும். தொழில். அதிக மூலதனம் செய்வீர்கள். வரவு கூடும். கடன் வசூலாகும். உங்கள் கருத்துக்களுக்கு மதிப்பு. விரும்பிய உணவுண்டு மகிழ்வீர்கள். |

# அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு

# சமூக பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு



அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள், 45 கோடி பேருக்கு, தேசிய அளவிலான, 'சமூக பாதுகாப்பு நிதியை' உருவாக்குவது குறித்து, மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது, என, பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

தேசிய தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பின், 45ஆவது ஆண்டு விழா, டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முக்கிய தொழிற் சங்கங்கள் இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சியில், பிரதமர் மன் மோகன் சிங் பேசியதாவது, நாட்டில், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத தொழிலாளர்கள் என, 45 கோடி பேர் உள்ளனர். இவர்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட வேண்டியது அவசியம். இதை கருத்தில் கொண்டு, தேசிய அளவில், தொழிலாளர் சமூக பாதுகாப்பு நிதியை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை, பல காலமாக உள்ளது.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து, மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. விரைவில், இக்கோரிக்கை நிறைவேற்றப்படும்.

பரிசீலனை ஓய்வூதியத் திட்டம் மூலமாக, தற்போது ஓய்வூதிய நிதி வழங்கப்படுகிறது. இதில், குறைந்தபட்ச ஓய்வூதியத்தை வழங்கிட, உத்தரவாதம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. இதுவும்,மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. தொழிலாளர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கும் திட்டம், 1995 முதல் அமலில் உள்ளது. அதன்படி, 50 சதவீதத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள், குறைந்தபட்சம், 12 ரூபாயிலிருந்து, அதிகபட்சம், 500 ரூபாய் வரை ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இந்த நிலை மாற்றப்பட்டு, குறைந்தபட்சம் மாதம், 1,000 ரூபாய் ஓய்வூதியம் அளிக்க வழிவகைசெய்யப்படும்.

குறைந்தபட்ச ஊதியத்தை, தொழிலாளர்களுக்கு வழங்க உறுதி செய்யும், 1948ஆம் ஆண்டு சட்டத்தில், திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இந்த திருத்தங்களுக்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பார்லிமென்டில், சட்டமான பிறகு, தொழிலாளர்கள், மாதச் சம்பளம் ஏன்பது, குறைந்தபட்சம், 4,000 முதல், 5,000 ரூபாவாகி விடும் என்றார்.




# பஸ்ஸிலிருந்து பணமழை




ஆந்திர மாநிலம் வரங்கல் மாவட்டம் பரசலா பஸ் நிலையத்தில் இருந்து அனுமகொண்டா என்ற ஊருக்குச் சென்ற அரசு பஸ்ஸிலிருந்து பண மழை கொட்டுவது போல் 500 ரூபாய் தாள் பறந்து விழுந்ததைக் கண்ட மக்கள் அதனைப் பொறுக்குவதில் போட்டியிட்டு மோதிக் கொண்டனர். குறித்த பஸ்ஸின் பின் இருக்கையில் இருந்த மர்ம நபர் ஒருவர் 500 ரூபாய் தாள்களை வீதியில் பறக்க விட்டுள்ளார். இதனால் வீதியில் பண மழை கொட்டுவது போன்று ரூபாய் தாள்கள் பறந்து விழுந்துள்ளன.

இதனைக் கண்ட பொதுமக்கள் பணத்தைப் பொறுக்குவதில போட்டியிட்டதில், அவர்களுக்குள் மோதலும், தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. வாகனத்தில் வந்தவர்கள் கூட வாகனத்தை நடு வீதியில் நிறுத்தி விட்டு பறந்து வந்த ரூபாய் தாளைப் பொறுக்கியதால் வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், அப்பகுதி எங்கும் பரபரப்பு எற்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து வந்து பொதுமக்கள் பொறுக்கிய 500 ரூபாய் தாள்களை பறிமுதல் செய்தனர். மக்களிடம் பறிமுதல் செய்தவற்றில் 11 தாள்கள் மட்டுமே பொலிஸார் வசம் சிக்கியது. ஆனால் ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள தாள்கள் வீதியில் பறக்க விடப்பட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது.

# மன்மோகன் சிங்கிற்கு ஒபாமா அழைப்பு



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தியா-அமெரிக்கா இடையேயான ஒப்பந்தம் வலுவிழந்து வரும் நிலையிலே மன்மோகன் சிங்கை அமெரிக்கா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்பை மன்மோகன் சிங் ஏற்றுள்ளதாகவும் அவர் அமெரிக்கா செல்லும் திகதி குறித்து ஆலோசனை நடைபெற்று வருவதாகவும் பிரதமர் அலுவலக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் அணுசக்தி சட்டம் குறித்து ஆலோசிப்பதற்காக ஒபாமா இந்த அழைப்பை விடுத்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதேவேளை, இவ்வழைப்பானது இருநாடுகளிடையேயான நட்புறவை வளரச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஞாயிறு நற்சிந்தனை

### தூய ஆவியர் பெருவிழா

(திருத்தூதர் பணிகள் 2 : 1 - 21
(யோவான் 14 : 8 - 17, 25 - 27)

இன்றைய நாளுக்குரிய நிறம் சிவப்பு. அது தீயின் நிறம். தூய ஆவி பெந்தக்கோஸ்தே சம்பவத்தில் நெருப்பாக, தீ நாவுகளாக வர்ணிக்கப்படுகின்றது. பெந்தக்கோஸ்தே நிகழ்வு தனி நபர், சமுகம் இரண்டுக்குமான ஒரு நிகழ்வு.

"பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்த போது அவர்கள் எல்லாரும் ஓரே இடத்தில் கூடியிருந்தார்கள். தீடீரென்று கொடுங் காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். (திரு.பணிகள் 2 : 1 - 4)

ஆகவே பெந்தக்கோஸ்தே நிகழ்வின் போது, திருச்சபை மீட்பின் செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்ல அனல் மூட்டப்பட்டது. அதுபோல ஒவ்வொரு தனிநபரும் தனது அருட் கொடையைப் பெற்றுக்கொள்ளவும், திருச்சபையைக் கட்டியெழுப்பவும் அனல் மூட்டப்படுகின்றார்கள், எனவே இந்த நாளில் தனிநபர்களாகவும், திருச்சபையாகவும் தூய ஆவியானவர் நம்மை அனல் மூட்டவேண்டும் என்று மன்றாடுவோம்.

ஜெபித்தல் இல்லாமல் தூய ஆவியானவர் ஊற்றப்படுவதில்லை. "விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்தனை உறுதி!" (லூக்கா 11 : 13). எங்கள் மனதின் அமைதியில், எங்கள் கூட்டு வழிபாட்டில், குழுக்களில் தூய ஆவியானவரின் கொடைக்காக நாம் மன்றாட வேண்டும்


பெந்தக்கோஸ்தே பண்டிகையின் ஆரம்பத்தைப் பார்த்தால் இது ஒரு யூதப் பண்டிகை பெந்தக்கோஸ்தே என்ற சொல்லின் அர்த்தம் 'ஐம்பது' என்பதாகும். அது ஓர் ஐம்பதாம் நாள் கொண்டாட்டம் கோதுமை அறுவடைக்குப் பின்பு வரும் ஐம்பதாவது தினம் கொண்டாடப்பட்டது. இத்தினத்திலேயே அறுவடை செய்யப்பட்ட அரிக்கட்டுக்கள் ஒன்று சேர்க்கப்பட்டன. யூதருக்கு இது மகிழ்ச்சியான திருவிழா கிறிஸ்தவர்களாகிய நாம் மீட்பின் பின்பு வரும் ஐம்பதாவது நாள் இவ்விழாவைக் கொண்டாடுகின்றோம். அந்தநாளில் தூய ஆவியானவர் ஆரம்ப திருச்சபை மீது பொழியப்பட்டதை நாம் நினைவு கூறுகின்றோம். அந்த நாளில் 3000 ஆன்மாக்கள் முதல் அறுவடையாகத் திருச்சபைக்குள் கொண்டு வரப்பட்டார்கள். பெந்தக்கோஸ்தே திருவிழாவுக்கு ஓர் அர்த்தம் உண்டு சீனாய் மலையில் கடவுள் மோசேயிடம் திருச்சட்டத்தை கையளித்ததை இக்கொண்டாட்டம் நினைவு கூறுகின்றது. கிறிஸ்தவர்களாகிய நாமும் என்றும் வாழும் வாக்காம் இயேசுகிறிஸ்து நமக்குத்தரப்பட்டார் என்பதற்காக கடவுளுக்கு நன்றி கூறுகின்றோம். கிறிஸ்துவோடு திருச்சட்டத்தின் காலம் முடிவடைந்து அருளின் காலம் ஆரம்பமாகின்றது.

வி.பி.தனேந்திரா.



தனியார் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக மும்பை சென்ற இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ, அருகில் கிரிக்கெட் வீரர்கள் ஜெயசூர்யா மற்றும் மேத்யூஸ் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

# இந்தியாவுக்கு இயற்கை எரிவாயு ஏற்றுமதி



அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு இயற்கை எரிவாயுவை ஏற்றமதி செய்ய அந்நாட்டு அரசு விதிமுறைகளுடன் கூடிய அனுமதியை வழங்கியுள்ளது. அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் திரவ இயற்கை எரிவாயுவை, அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகளுக்கு மட்டுமே ஏற்றமதி செய்ய முடியும்.

இந்தியா இது போன்ற ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்து கொள்ளவில்லை. எனினும், இந்தியாவுக்கு இயற்கை எரிவாயுவை ஏற்றுமதி செய்ய அமெரிக்காவின் எரிசக்தித்துறை விதிமுறைகளுடன் கூடிய சிறப்பு அனுமதி அளித்துள்ளது.

இதனால் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள குயின்டானா தீவில் உள்ள ஏற்றுமதி முனையத்திலிருந்து திரவ இயற்கை எரிவாயு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இந்தியாவின் எரிசக்தி தேவையின் ஒரு பகுதியை இதன் மூலம் பூர்த்தி செய்ய முடியும்.

## வாழ்க வளமுடன்

பெயர் : தி.கானுஜா

முகவரி : இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

அகவை 6 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர் : சு.கிருஷ்ணிகா

முகவரி : "சுரேந்திரா ஸ்ரோர்ஸ்" வற்றாப்பளை, முள்ளியவளை.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# உடுவில் பிரதேச விளையாட்டு விழா; இணுவில் இந்து முதலிடம்

(குப்பிளான்)

உடுவில் பிரதேச வருடாந்த விளையாட்டு விழாவின் முதலிடத்தை இணுவில் இந்து விளையாட்டுக்கழகம்கைப் பற்றிக் கொண்டது.

உடுவில் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் விக்னேஸ்வராவிளையாட்டுக்கழக மைதாத்தில் சிறப்புற நடைபெற்றது.

இறுதி நாளன்று கால்பந்தாட்ட இறுதி ஆட்டம் மற்றும் மைதான சுவட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றன. இதில் ஒட்டுமொத்தமாக இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் 60 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும், கும்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்தையும்பிடித்துக் கொண்டன. இதில் சிறந்த வீரராக விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த விதுஷன் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றியீட்டியோருக்கும், முதலிடம் பிடித்த கழகங்களுக்குமான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் எம். சந்திரகுமார், உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி செல்வக்குமாரி, உடுவில் பிரதேசசெயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரன், வலி. தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான அரிகரன், இராஜசேகரம், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தி யோகத்தர்மோகனதாஸ், சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் பார்த்தீபன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சுன்னாகம் பிரதேச உதவி இணைப்பாளர்வலன்டயன், கிராம சேவையாளர்கள், விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள், இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (93)

## வடமாகாண விளையாட்டுத்துறை வளர்ச்சி துறை சார்ந்தோருடன் இணைந்து முன்னெடுக்கப்படும்



(குப்பிளான்)


வடமாகாணத்தின் விளையாட்டுத்துறையின் வளர்ச்சி திருப்திகரமானதாக இல்லை. இது முன்னோக்கிச் செல்ல வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது. இதனை வெற்றிகரமாக துறை சார்ந்தோருடன் இணைந்து முன்னெடுக்க நாம் தயாராகவுள்ளோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசங்களின் விளையாட்டுத்துறையினைவளர்ச்சி நோக்கிக் கொண்டு செல்ல வேண்டிய தேவை உள்ளது. அதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும். ஒரு குறிப்பிட்டளவு இளைஞர், யுவதிகளே விளையாட்டுக்களில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அத்தோடு ஒருசில விளையாட்டுக்களிலேயே எமது பிரதேசம் அதிக கவனம் செலுத்தியும் வருகிறது. இந்த நிலைமை மாற வேண்டும்.


பெருவிளையாட்டுகளில் காட்டுகின்ற ஆர்வம் தடகள விளையாட்டுக்களிலும் இளைஞர், யுவதிகள் காட்ட வேண்டும். முக்கியமாக எமக்கே சொந்தமான பாரம்பரிய பண்பாட்டு விளையாட்டுக்களை மறந்து போகும் சமூகமாகவும் நாம் மாறிக் கொண்டிருக்கின்றோம். இது மாற்றம் பெற வேண்டும். நாம் எமது பாரம்பரிய பண்பாட்டு விளையாட்டுகளிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அரசு அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்களை ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் விளையாட்டு ஒவ்வொரு மைதானம் அமைக்கவுள்ளது. எனவே இந்த வசதி வாய்ப்புக்களையும் பயன்படுத்தி எமது இளைஞர், யுவதிகள் விளையாட்டுத்துறையிலும் மிளிர வேண்டும். அத்தோடு தொடர்ந்தும் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக எம்மாலான எல்லாப் பங்களிப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.











# பிரதேச மட்ட கால்பந்து வல்லை அணி சம்பியன்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக மட்ட கால்பந்துப் போட்டியில் வல்லை அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நெற்கொழு கழுகுகள் விளையாட்டு மைானத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட பல அணிகள் பங்குகொண்டபோதும், இதன் இறுதிப் போட்டியில் திக்கம் இளைஞர் அணியும், வல்லை அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. முற்பாதி ஆட்டத்தில் மாறி மாறி இரு அணிகளுமே முதல் கோலைப் போட்டுக் கொண்டன. இருப்பினும் முற்பாதி ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கும் நிலையில் வல்லை அணி மேலுமொரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே மேலதிக கோலைப் பெற்றுக் கொள்ளும் முனைப்புடன் செயற்பட்டன. இதில் இரு அணிகளின் பிற்கள வீரர்களின் சிறப்பான செயற்பாட்டால் கோல் எல்லை இரு அணிகளாலும் எட்டமுடியவில்லை பிற்பாதி ஆட்டம் கோல் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் நிறைவுக்கு வந்தது. இறுதியில் வல்லை அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைபற்றிக் கொண்டது.

# கிண்ணம் வென்றது சந்திரோதயா

(வடமராட்சி)

வடமராட்சி உதயகதிர்காமம் யூ.கே. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் கரணவாய் சந்திரோதயா அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமராட்சிப் பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் உதயகதிர்காமம் யூ.கே. விளையாட்டுக்கழகம் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை நடாத்தியது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இப்போட்டித் தொடரில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கரப்பந்தாட்ட அணிகள் பல பங்குகொண்டன.

இருப்பினும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும், கரணவாய் சந்திரோதயா அணியும் மோதிக் கொண்டன. இதில் கரணவாய் சந்திரோதயா அணி 2-1 என்ற செட் கண்ககில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

# தென்னாபிரிக்கா இணக்கம்

(கொழும்பு)

இலங்கையுடனான 5 ஒருநாள் மற்றும் மூன்று ருவென்ரி – 20 போட்டிகளில் விளையாட தென்னாபிரிக்க அணி இணக்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் முன்னர் மூன்று டெஸ்ட் போட்டிகளென இணைக்கப்பட்டிருந்தது.

இந்தப் போட்டிகளை இலங்கை பிரிமியர் லீக் தொடரை முன்னிட்டு ஒத்திவைக்கும்படி இலங்கை கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்திருந்தது.

இதனை ஏற்றே தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை போட்டி அட்டவணைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.இதன்மூலம் தென்னாபிரிக்க அணி தனது ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொள்ள எதிர்வரும் ஒக்ரோபர் வரை போராட வேண்டிய தேவை ஏற்படாது. இதில் தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளர் ரஸல் டொமிங்கோவின் முதலாவது தொடராகவும் இலங்கை சுற்றுப் பயணம் அமையவுள்ளது. மறுபுறத்தில் தென்னாபிரிக்கத் தொடரானது இலங்கை அணி இரு மாதங்களுக்குள் விளையாடும் மூன்றாவது ஒருநாள் தொடராகவும் அமையவுள்ளது. இலங்கை எதிர்வரும் இரண்டு மாதங்களில் சம்பியன்ஸ் கிண்ணம் மற்றும் மேற்கிந்தியத்தீவுகளில் முக்கோண ஒருநாள் தொடர்களிலும் விளையாடவுள்ளது. தென்னாபிரிக்கா மற்றும் இலங்கைக்கிடையில் கடைசியாக கடந்த 2012 ஜனவரியில் ஒருநாள் தொடர் இடம்பெற்றது. தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற 5 போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்க அணி முதல் மூன்று போட்டிகளிலும் வென்று தொடரைக் கைப்பற்றியதோடு அடுத்த இரு போட்டிகளிலும் இலங்கை வென்றது.

# ஒத்திவைப்பு

சிம்பாப்வேயுடன் இந்திய கிரிக்கெட் அணி விளையாடவிருந்த ஒருநாள் தொடரை ஒத்திவைத்துள்ளது. இந்திய கிரிக்கெட் சபை. ஐ. பி. எல். போட்டிக்குப் பின்னர் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் இந்திய அணி விளையாடவுள்ளது. அதைத் தொடர்ந்து சிம்பாப்வேயுடன் அதன் சொந்த மண்ணில் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரிலும், பின்னர் ஜூன் 28 முதல் ஜூலை 11 வரை மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள முக்கோணத் தொடரிலும் இந்திய அணி விளையாடுவதாக இருந்தது. இந்த நிலையில் தொடர்ச்சியாக விளையாடுவதால் வீரர்கள் களைப்படைவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு சிம்பாப்வேயுடனான தொடரை ஒத்திவைத்துள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய சபையின் இந்த முடிவால் சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கு நிதிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்று தெரிகிறது.

# அவரவருக்கேயுரிய காரணங்களுக்காக அழிவை எல்லோருமாக நடத்தினார்கள்!

- ஆதிஷ் தாசீர் கட்டுரையிலிருந்து.

நான் கடந்த மார்ச் மாதம் முதன்முதலாக இங்கு வந்தபோது, பிரதானமாக இராணுவ அடிப்படையில் இழப்புகள் ஏற்பட்டிருப்பதை கண்டேன். ஆனால் தோல்வியைப் பற்றி இலங்கைத் தமிழர்களிடையே ஏற்பட்டிருந்த உணர்வு போராளிகள் அடைந்த தோல்வியைவிட வெகு ஆழமானதாக அவர்களின் மனங்களில் ஊடுருவியிருந்தது. அது தார்மீக மற்றும் உளவியல் ரீதியான ஒரு தோல்வி.

உண்மையில் தமிழர்களின் தோல்விக்கு, இலங்கை இராணுவம் எல்.ரீ.ரீ.ஈ யினை வெற்றி கொண்டதில் குறைந்தளவு பங்கே உள்ளது, அந்த இயக்கம் தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டதிலேயே பெரும் பங்கு உள்ளது.

தமிழ் மக்களின் சுய உணர்வு நம்பிக்கையின் பாதுகாவலர்களாக புலிகள் நீண்ட காலமாக இருந்துள்ளார்கள். ஆனால் அந்த இயக்கம் ஆழமான குறைபாடுகள் உள்ள ஒரு இயக்கமாக இருந்தது. வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையின் கீழ் புலிகள் தற்கொலைப் படைகளை திறமையாக பயன்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். இது வெறுமே ஒரு யுத்த முறையாக மட்டும் இருக்கவில்லை, ஆனால் அநேகமாக ஒரு அடையாளமாக, ஒரு சுய தண்டிப்பு உணர்வை விளக்குவதாகவும் இருந்தது. மற்றும் அதுதான் பிரபாகரன் தமிழ் மக்களுக்கு நடத்திய சுய தண்டிப்பும் கூட. அவர் சமாதானத்தை பற்றிய எண்ணங்கள் குறைவாக உள்ளதாக தோன்றும் நவீன கால கோரியோலானஸை போன்ற ஒரு மனிதர். அவர் தமிழர்களை முடிவில்லாத ஒரு போர்ப் பயணத்துக்கு அழைத்துச் சென்றவர், அதில் சமரசம் மற்றும் சலுகைகள் எப்போதுமே போதுமானதாக இருந்ததில்லை மற்றும் அதில் மிதவாத தன்மைகள் அனைத்தும் காட்டிக்கொடுப்பாகவே பார்க்கப்பட்டன.



நான் வடமாகாணத்தின் தலைநகரமான யாழ்ப்பாணத்தை அடைந்த உடன், 1990களில் "முறிந்த பனை" என்கிற புத்தகத்தை எழுதிய கல்வி உலகத்தை சேர்ந்த ஒரு பெண்ணின் சகோதரி வீட்டில் இரவு உணவு அருந்தினேன். அந்தப் புத்தகத்தில் ஏதோ வகையில் புலிகளுக்கு எதிரான எளிய தர்க்க வாதம் இருந்தது, அரசாங்கம் மற்றும் புலிகள் ஆகிய இருபகுதியினரும் புரிந்துள்ள அட்டூழியங்களை கருத்தில் கொண்டு அவற்றை பாரபட்சமற்ற முறையில் சுட்டிக்காட்ட முயற்சித்த ஒரு கல்விப் பணி அது. ஆனால் இது பிரபாகரனுக்கு மிகவும் தேசத்துரோகமான செயலாகத் தோன்றியதன் விளைவாக அந்தப் புத்தகம் அச்சுக்குப் போவதற்கு முன்னரே என்னை விருந்துக்கு அழைத்தவரின் சகோதரி கொல்லப்பட்டார்.

அந்த இரவில் அந்த அறை, தங்களின் வாழ்க்கையில் எல்.ரீ.ரீ.ஈயின் கொடுங்கோன்மையால் நிரந்தரமாக விட்டுச்சென்ற வடுக்களை சுமந்திருக்கும் மனிதர்களால் நிரம்பியிருந்தது. அங்கு ஒரு முஸ்லிம் பெண்ணும் இருந்தார், அவரும் மற்றும் அவருடன் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் வசித்த அனைத்து முஸ்லிம் குடும்பங்களுக்கும், 1990ஆம் ஆண்டு ஒரு காலை வேளையில் ஒரு பாடசாலை வளவுக்குள் வரும்படி கட்டளை வழங்கி அழைத்து வரப்பட்டு, அவர்கள் பிறந்த நகரை விட்டு வெளியேற அவர்களுக்கு அங்கு வைத்து இரண்டுமணி நேர அவகாசம் வழங்கப்பட்டது. அவர்களுடைய பெறுமதியான உடமைகள் மற்றும் அவர்களின் காணி உறுதிகள் அனைத்தையும் அவர்களது வீட்டிலேயே விட்டுச் செல்ல வேண்டும் என்று அவர்களிடம் சொல்லப்பட்டதாம். எங்களை ஏன் துரத்துகிறீர்கள் என அவர்கள் கேட்டபோது, நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் அதனால்தான் கொல்லப்படாமல் தப்பியிருக்கிறீர்கள் என்று அவர்களிடம் சொல்லப்பட்டது. அவர்களை லொறிகளில் ஏற்றி மாவட்ட எல்லைவரை காவலுடன் கொண்டு சென்று விட்டார்களாம். (இந்த பெண்ணைப் போன்ற அநேகர் 2009 போர் முடிவடைந்த பின்னர்தான் இங்கு திரும்பி வந்தார்கள்).

போர் வந்தபோது, பிரபாகரன் தனது பின்வாங்கலை மேற்கொள்வதற்கு ஏற்ற ஒரு வியூகமாக, கிட்டத்த 300,000 பேர் வரையான பொதுமக்களை முன்னேறிவரும் இராணுவத்துக்கு எதிராக மனிதக் கேடயங்களாக பயன்படுத்தினார். ஏராளமான தமிழர்கள் கொல்லப்படுவதை அனுமதித்தால் சர்வதேச சமூகம் இதில் தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்படும், மற்றும் தமிழர்களுக்கு அவர்களுடைய தாயகம் கிடைத்துவிடும் என்பது அவரது நோக்கமாக இருந்தது.

ஆனால் இந்த இடத்தில் அவர் ஒரு மாபெரும் தவறைச் செய்துவிட்டார். ஒன்றில் அவர் தனது முக்கியத்துவத்தை அல்லது மேற்கின் நாகரிக உணர்வை அளவுக்குமீறி எடைபோட்டுவிட்டார். மேற்கானது அழுத்தமான பிரச்சினைகளையே ஆக்கிரமிக்கும் போர் வெற்றிபெற வேண்டுமானால் அநேக தமிழர்கள் மடியத்தான் வேண்டும் என அது விட்டுவிட்டது.

இது தமிழரின் தோல்வியில் சேர்க்கப்பட்ட ஒரு அவமான-கரமான பகுதி. அவர்கள் வெறுமே போரில், மட்டும் தோற்கவில்லை. அவர்கள் பிறப்பித்த முக்கியமான இயக்கம், அதற்காக அவர்கள் வரி செலுத்தி, உடல் வலிமையுடைய ஆண்களையும் மற்றும் பெண்களையும் தியாகம் செய்து வளர்த்துவிட்ட இயக்கம் இறுதியில் மற்ற எல்லாவற்றையும் விட அவர்களுக்கு அதிக கெடுதலை செய்துவிட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், புதிய உட்கட்டமைப்பு திட்டங்கள் போன்றவற்றை ஏற்படுத்தி தமிழ் மக்களிடம் தயாள குணத்துடன் நடந்தாலும்கூட, தமிழர்கள் தங்களது தோல்வியை தங்களது அவமானமாகவே கருதுகிறார்கள். அது அவர்களின் தவறல்ல. அப்படியான அடக்கமுடியாத ஒரு சூழ்நிலையில் எதுவுமே சரியானதாக தோன்றாது. தமிழர்கள் தங்களது இழப்பாக கருதுவது உண்மையில் ஒரு கதையின் இழப்பு. அவர்கள் இப்போது தங்களுக்கென்று ஒரு கதையில்லாத மக்கள், இடப்பெயர்வு மற்றும் போர் காரணமாக அழிவுக்கும், மன அதிர்ச்சிக்கும் ஆளாகியுள்ள மக்கள், அவர்களது சுய நிர்ணய உரிமை எனும் கனவு, எதிர்மறுப்பு கண்ணோட்டமுள்ள அவர்களது தலைவரினால் கடத்தப்பட்டு வெறும் சிம்ம சொப்பனமாக மாறிவிட்டது.

('நியுயோர்க் டைம்ஸ்')

---

# உலகின் அழகிய 10 தீவுகள்


எவ்வளவுதான் நாடுகள் அழகாய் மாட மாளிகைகளுடன் காட்சியளித்தலும், அவை தனித்தீவுகளுக்கு ஈடு ஆகமாட்டா. ஆஹா என வியக்க வைக்கும் உல்கின் அழகிய 10 தீவுகளின் பட்டியல் இதோ:

- பிலிப்பைன்ஸ் - போரோகே
- இந்தோனேசியா - பாலி
- கிழக்கு பசிபிக் கடல் - கலபாகோஸ்
- ஹவாய் - மாயுஜ
- அவுஸ்ரேலியா - க்ரீட்.ஃ.பாரியர்
- கிரீஸ் - சன்டோரினி
- ஹவாய் - கவாய்
- ஹவாய் - .ஃ.பிக் தீவு
- மெடிடரேனியன் கடல் - சிசிலி
- பிரிட்டிஷ் கொலம்பியா - வான்கோவர் தீவு



---

# ஆப்ரஹாம் லிங்கன்




1831 - வியாபாரத்தில் தோல்வி
1832 - சட்டசபைத் தேர்தலில் தோல்வி
1833 - வியாபாரத்தில் மீண்டும் தோல்வி
1834 - சட்டசபைத் தேர்தலில் தோல்வி
1836 - சட்டசபைத் தலைவர் தேர்தலில் தோல்வி
1840 - எலக்டர் தேர்தலில் தோல்வி
1843 - காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
1848 - காங்கிரஸ் தேர்தலில் மீண்டும் தோல்வி
1855 - செனட் தேர்தலில் தோல்வி
1856 - உதவி ஜனாதிபதி தேர்தலில் தோல்வி
1858 - செனட் தேர்தலில் தோல்வி

இறுதியாக 1860இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

---

# பற்கள் 32




32 பற்கள் மனிதனுக்கு என்று சும்மா சொன்னால் போதுமா? அவைகளின் பயன்பாட்டைப் பொறுத்து மனிதனுக்கு நான்கு வகையான பற்கள் உள்ளன.

கடிப்பதற்கு - 8 பற்கள்
கிழிப்பதற்கு - 4 பற்கள்
வெட்டுவதற்கு - 8 பற்கள்
அரைப்பதற்கு - 12 பற்கள்

---

# முன்னோர் செய்த உதவி!

நம் முன்னோர் இருக்கும் திக்கு நோக்கி (எந்தத் திக்கு என்பது தான் தெரியவில்லை) இரண்டு கரங்களையும் கூப்பித் தண்டனிடுகிறேன். ஆகா, அவர்கள் நமக்கு செய்திருக்கும் நன்மை தான் என்ன! வருஷம் 365 நாளில் ஏறக்குறைய, 300 நாள் நமக்கு விடுதலை அளித்திருக்கின்றனர்.

இக்காலத்தில் வாரத்தில் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஆனால், நம் முன்னோர் செய்து வைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள்!

மாதங்களிலே மார்கழியும், புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக் கொண்டால் அமாவாசை, பாட்டிமை, நவமி, திதி - இவை உதவா. பின்னர் பரணி, கார்த்திகை நட்சத்திரங்கள் சனிக்கிழமை, செவ்வாய்க் கிழமை. ஆகா! செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லையா?

பின்னர் மரண யோகம், கரி நாளும். மாதம், திதி, நட்சத்திரம், கிழமை, யோகம் எல்லாம் கூடிய நாள் ஒன்றிருந்தால், அதில் ராகு காலம், தியாஜ்யம், பிரதோஷம் இந்த வேளைகள் கூடா, இவ்வளவு விபத்துகளையும் கடந்து, ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப் போனால், யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மி விட்டால் போதும்... அன்று விடுமுறைதான்.

ஆகா... இவ்வளவும் பூரணமாக அமுலிலிருந்த அந்தப் பழைய காலம்... நினைத்தால் நாவில் ஜலம் சொட்டுகிறது. இப்போது வரவரக் கலியுகமல்லவா முற்றி வருகிறது.

**(1928இல் கல்கி எழுதிய 'ஏட்டிக்குப் போட்டி!' கட்டுரையில்)**



# எல்லாத்துலயும் ஒரு அரசியல் இருக்கு

3

— சார்லஸ் —



சாதாரண பார்வையாளர்களிலிருந்து விஷயம் தெரிந்தவர்கள் வரை நாம் எல்லாருமே எல்லாவற்றையுமே அரசியலாக்கித்தான் பார்க்கிறோம். நாம் ரசிக்கும் அல்லது வெறுக்கும் எதையும் ஒட்டுமொத்தமான சூழலில் இருக்கும் நியாய அநியாயங்களோடு இணைத்துக்கொள்ளவே நாம் விரும்புகிறோம். நம்முடைய பண்பாட்டிலேயே இந்தக் குணம் எப்படியோ ஒட்டிக்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு, ஒருவர் ரஜினிகாந்தின் திரைப்படங்களால் கவரப்பட்டிருக்கிறார், திரையில் தோன்றும் ரஜினியின் ஆளுமையால் மிகவும் ஈர்க்கப்பட்டிருக்கிறார் என்றால், அவர் ரஜினியின் நடிப்பை ரசிப்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவே மாட்டார். அவர் ரஜினியை வழிநடத்தும் தலைவர்களில் ஒருவராகத்தான் பார்ப்பார். அவரைப் புனிதராகவும் அறிஞராகவும் உருவகித்துக் கொள்வார். தனது ஆன்மீகத்திலிருந்து, வாக்குரிமை வரை அந்த ரசிகர் ரஜினியையே பின்பற்றுபவராக ஆவார்.

ஒருவேளை அந்த ரசிகர் பின்னாளில் கொஞ்சம் மாறி, வாழ்க்கைச் சுழலில் சிக்கியோ அல்லது திடீர் உலக ஞானத்தைப் பெற்றோ, சமூக அமைப்பின்மேல் விமர்சனமும் கோபமும் கொண்டவராக ஆகிறார் என்று வைத்துக்கொள்வோம். முன்பு வெறிபிடித்த ரசிகராக இருந்த அவர் இப்போது முற்றிலும் எதிர்ப்பக்கத்தில் போய் நின்று அதே வெறியோடு கத்த ஆரம்பிப்பார். எல்லாப் பிரச்சினைகளுக்கும் ரஜினிதான் காரணம் என்று சொல்ல ஆரம்பிப்பார். எதிர்க்கிறாரோ அல்லது இப்போதும் ஆதரிக்கிறாரோ எதுவாயினும் அவரைப் பொறுத்தவரையில் ரஜினி ஒரு அரசியல் சக்திதான்.

தான் ரசித்த ஒருவரை சமூகத்தின் உதாரண புருஷனாக நிறுவ முயல்வதும், தனக்குப் பிடிக்காத ஒன்றை ஒட்டுமொத்த சமுதாயத்துக்கே விஷம் என்று நிறுவ முயலுவதும் என்ன மாதிரியான மனநிலை என்று எனக்குப் புரியவில்லை. "அந்தப் படம் வெளிப்படுத்தும் அரசியல் நிலைப்பாடு எனக்கு ஏற்புடையதாக இல்லை ஆனாலும் எனக்குப் படம் ரொம்பப் பிடித்திருக்கிறது" என்று சொல்கிறவர்களை நான் மிகக் குறைவாகவே கண்டிருக்கிறேன். ஏன்? ஒரு இயக்குனரின் அரசியல் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அவருடைய படமும் பிடிக்காமல் போகவேண்டுமா என்ன?

இங்கிலாந்தில் பிறந்த சினிமா இயக்குனர்களில் சார்லி சாப்ளின், அல்.்.பிரட் ஹிட்ச்கொக் அளவுக்கே முக்கியமான இன்னொருவர் டேவிட் லீன். பிரம்மாண்டமான சினிமா என்பதற்கு உதாரணம் அவரது படங்கள் தான். கதையை சுவாரஸ்யமாகச் சொல்வது மட்டுமல்ல, கதை நடக்கும் மொத்தப் புவியியலையும் பெயர்த்தெடுத்துப் படச்சுருளுக்குள் வைத்துக் கடத்திவிட அவரால் மட்டுமே முடிந்திருக்கிறது. கண்ணுக்குத் தெரிவதைப் படம் பிடிப்பதில் என்ன பிரமாதம் இருக்கிறது என்று சினிமா பற்றித் தெரியாதவர்கள் கேட்கலாம். ஆனால் உண்மையில் எல்லா இயக்குனர்களும் படம்பிடிக்கப் போராடிக் கொண்டிருப்பது கண்ணுக்குத் தெரியாத உணர்வுகளைத் தான். டேவிட் லீன் உணர்வுகளை மட்டுமல்ல, விதவிதமான கதைக் களங்களையும் புவியியலையும் மட்டுமல்ல, அங்கிருக்கும் தட்பவெப்பத்தையும் கடத்தி வந்து நம்மை உணரச் செய்துவிடுவார்.

"லோரன்ஸ் ஒ.்.ப் அரேபியா" படத்தைப் பார்ப்பவர்கள், பல நாட்கள் பாலைவனத்தில் வாழ்ந்துவிட்டதைப் போல உணர முடியும். இதை என் அனுபவத்திலிருந்து மட்டும் சொல்லவில்லை, உலகமெங்கிலும் அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் இதைப் பதிவுசெய்திருக்கிறார்கள். "டாக்டர் ஸிவாகோ" படத்தை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும், ரஸ்ய நிலவெளியில் பனியில் நனைந்தபடி பனியை சுவாசித்தபடி உறைபனியின்மீது நடந்து களைத்ததைப் போன்ற உணர்வே எனக்குத் தோன்றியிருக்கிறது. ஜப்பானிய ஆதிக்கத்தில் பர்மா - சியாம் ரயில் பாதை போடப்பட்டதைப் பின்னணியாகக் கொண்ட "தி



பிரிட்ஜ் ஓன் தி ரிவர் க்வாய்" படம் முழுக்க உண்மையில் இலங்கையில் தான் படமாக்கப்பட்டது என்பதை நம்புவதற்குச் சிரமமாகவே இருக்கிறது. காரணம் நிஜம் போலவே அத்தனைத் துல்லியமாகக் காட்சிச் சூழல் படமாக்கப்பட்டிருக்கிறது. மேலே சொன்ன மூன்று படங்கள் மட்டுமே கூடப் போதும் டேவிட் லீன் உலகம் உள்ளவரை நினைக்கப்படுவதற்கு.

ஆனால் டேவிட் லீன் ஆங்கிலேய மேட்டிமைவாதத்தில் ஊறிய பழமைவாதி. உலகின் பல்வேறு நிலப்பரப்புகளைப் படம்பிடித்த அவரால் தனது சொந்த நிலத்தின் இனவாதத்திலிருந்து மாறுபட்டுச் சிந்திக்க முடியவில்லை. தன்னுடைய மத நம்பிக்கையிலும் ஆழமான பற்றுடைய அவர், அதைத் தன் படங்களிலும் வெளிக்காட்டத் தயங்கியதில்லை. நடுநிலையான ஒரு படத்தையும் அவர் எடுத்ததில்லை. ஆங்கிலேயர்கள் புத்திசாலிகளாகவும், மனித நேயம் மிக்கவர்களாகவும், கடின உழைப்பாளி களாகவும் காட்டப்படும் அதே வேளையில் ஜப்பானியர்களும், அரேபியர்களும், இந்தியர்களும் எல்லாம் காட்டுமிராண்டிகளாகவும், சுயநலமிகளாகவுமே அவர் படங்களில் காட்டப்படுகிறார்கள். கம்யூனிஸத்துக்கும், ரஸ்யப் புரட்சிக்கும் எதிரான படம் "டாக்டர் ஸிவாகோ". அதில் காலங்காலமாகப் பணக்காரர்களாக இருப்பவர்களே நல்லவர்களாக, நேர்மையான மேன்மக்களாக, மனித உணர்வுகளை மதிப்பவர்களாக காட்டப்படுகிறார்கள், புரட்சிப்படையைச் சேர்ந்தவர்கள் வக்கிரமும் கீழ்மைக் குணங்களும் கொண்டவர்களாகக் காட்டப்படுகிறார்கள்.

பொலிட்டிக்கலி கரெக்ட்-ஆக அவரது படங்கள் இல்லை. ஆனால் அதற்காக அந்தப் படங்களைத் திரையுலகம் நிராகரித்துவிடவில்லை.

(தொடரும்)

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

05

- டாக்டர்.பிரகாஷ் -

## இசையில் தொடங்குதம்மா:

நமது மூளைக்கும், இளையராஜாவின் மூளைக்கும் அமைப்பிலும், இயங்கும் விதத்திலும் நிச்சயமாக நிறைய மாற்றங்கள் இருக்கும். காரணம் - இசை.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக நடந்து வரும் ஆய்வுகளில் தெரிய வருவது இதுதான். குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கப்படும் இசையால், அவர்களின் மூளையின் அமைப்பில், செயல்பாடுகளில் நல்ல வளர்ச்சியை உருவாக்க முடியும் என்பதே.

இந்த உலகிற்கு வரும் முன்னரே, குழந்தைகள் அம்மாவின் குரலை, தனித்து இனங்கண்டு கொள்ளப் பழகி விடுகின்றன. சொல்லப் போனால், குழந்தை கேட்கும் முதல் இசையும் அதுதான். அம்மாவின் குரலை அரவணைப்பாக உருவகப் படுத்தும் குழந்தை, பிறந்த பின்னரும் அதையே தொடர்கிறது.

கர்ப்பத்தில் இருக்கையிலேயே பழக்கப் படுத்தப்பட்ட, கேட்ட எந்த ஒரு இசையுடனும், ஒலியுடனும் - அது அம்மா பாடிய பாடலோ, வாசித்த ஏதேனும் ஒரு இசைக் கருவியின் இசையோ அல்லது உரக்கக் கேட்ட இசையோ - குழந்தை வெகு விரைவாக அதனுடன் ஒத்திசைய முடிகிறது.

பேச முயற்சிப்பதற்குப் பல வாரங்களுக்கு முன்னரே, குழந்தைகள் தாயின் தாலாட்டுப் பாடல்களுக்கு பதில் கொடுக்க ஆரம்பிக்கின்றன. தொட்டிலில் போட்ட என் எட்டு மாதக் குழந்தையை ஆட்டிக் கொண்டே, ரே..ரே.. ரே..ரே.. என்று ராகம் போட்டுக் கூவி, சட்டென்று நிறுத்தினால், நான் விட்ட இடத்திலிருந்து அவனும் ரே ரே என்று மழலையில் தொடரக் கேட்டிருக்கிறேன். குழந்தைகள், தங்களை அறியாமலேயே ஒலியை உள்வாங்கி அதற்கு பதில் தருகின்றன.

பொருள்களைத் தொடுகையில், கீழே போடுகையில், தட்டுகையில், கரண்டி போன்ற ஏதேனும் ஒன்றை வைத்துத் தட்டுகையில் உண்டாகும் ஒலியால் அவர்கள் கவர்ந்திழுக்கப் படுகிறார்கள்.

என் ஒன்றே கால் வயது மகன், காலையில் எழுந்தவுடன் இரண்டு நிமிடங்களுக்குள், நேராக சமையலறைக்கு வந்து கைக்குக் கிடைத்த பாத்திரம், கரண்டியைக் கொண்டு லொட்டு லொட்டென்று அவனுக்குத் தெரிந்த சுப்ரபாதத்தை இசைப்பது தினசரி வாடிக்கையாகி விட்டது.

குழந்தைகளின் நகர்வு இயக்கத்திற்கும், அவர்களின் ஒலி எழுப்பும் திறனுக்கும் உள்ள தொடர்பை நரம்பியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளார்கள். சில குறிப்பிட்ட நகர்வு இயக்கங்களை மேற்கொள்ள முடியாத குழந்தைகளால், சில குறிப்பிட்ட ஒலியையும் உண்டாக்க முடியவில்லை.


இசையும், நகர்வும் ஒருமித்த ஒரு உருவாய் குழந்தை வளர்கிறது. தன் உடலையே ஒரு இசைக் கருவியாக இந்த உலகுடன் இயைந்து இசைக்கும் இசையாக வளரும் குழந்தையின் கட்டுப்பாடுகளற்ற நகர்வு பள்ளிக்கு சென்ற பிறகு, அதன் இயல்புத் தன்மையை இழக்கத் துவங்குகிறது.

அறிவியல் உலகில், குழந்தையின் மூளை வளர்ச்சியில் இசைக்கு இருக்கும் பங்கு குறித்த விவாதங்கள் நீண்ட காலமாக நிகழ்ந்து கொண்டே இருந்தன.

மொஸார்ட்டின் இசையைக் கேட்ட குழந்தைகளின் நியூரான் செல்களின் அடர்த்தி (density) அதிகமாகி அதன் காரணமாக ஞாபக சக்தி, புதிர்களுக்கு பதில் சொல்லும் திறன்கள் அதிகரித்ததை ஆய்வு முடிவுகள் உணர்த்தின.

மிகக் குறைந்த வயதிலேயே இசையைக் கற்றுக் கொண்ட குழந்தைகள் மொழித்திறன், கணிதத்திறன், செஸ் போன்ற நுட்பமான விளையாட்டுகளை விளையாடத் தேவையான ஒன்றிரண்டு படிகள் அட்வான்ஸாக சிந்திக்கும் திறன், ஞாபக சக்தித் திறன், மற்றும் பொதுவான ஐ.க்யூ போன்ற எல்லாத் திறன்களும் அதிகரித்து விளங்கின. இது போன்று, இசையால் Spatial Temporal Reasoning, and Language Analytical Reasoning திறனும் அதிகரிப்பதை "Mozart Effect" என்று அழைக்கிறார்கள்.

(தொடரும்)



# பின்தொடரும் கமரா!



ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த கம்பனி ஒன்று மெமான்ட்டோ என்னும் தீப்பெட்டி அளவு உள்ள கமராவைச் கண்டு பிடித்திருக்கின்றது. இதில் வழக்கமாய் வரும் கமரா போல் இல்லாமல் ஒரு கிளிப் மற்றும் ஸ்மார்ட் ஃபோனுக்கு வரும் கமரா போல் ஒரு சிறிய துவாரம் அவ்வளவுதான். இதை சட்டைப் பையில் அல்லது தொப்பியில் ஃ பெல்ட்டில் எங்கு வேண்டுமானாலும் செருகிக் கொள்ளலாம். இதில் இன்பில்ட் பற்றரி மற்றும் ஜிபிஎஸ் உள்ளது. இந்தக் கமரா ஒவ்வொரு 30 வினாடியும்-அதுவே முழித்துக் கொண்டு படங்களை எடுக்கும். பின்பு அடுத்த 30 வினாடிகள் இப்படியே நீங்கள் ஒப்பரேட் செய்யாமல் அதன் பாட்டுக்கு எடுத்துக் கொண்டே போகும் படங்களை. இதில் உள்ள 8 ஜிபி மெமரியில் பதிவு செய்யும்.

பின்பு கணனியில் இதை யூ எஸ் பி மூலம் செருகினால் மணி,இடம்,திகதி வாரியாக படங்களை டிஸ்ப்ளே செய்து அதை நீங்கள்உங்கள் கணனியிலோ வேறு எங்குமோ உங்கள் படங்களை சேமித்து வைக்கலாம். வாழ்நாள் முழுவதும் உங்களைப் பின்தொடர்ந்து பதிவுசெய்யும் இந்தக் கமராவின் விலை 30,000 ரூபா.

# ஒரே செக்கனில் முழு நீளத் திரைப்படத்தையும் தரவிறக்கம் செய்யலாம்...

செக்கனுக்குள் முழுத்திரைப் படத்தையே தரவிறக்கம் செய்யக்கூடிய மின்னல் வேக 5 ஜி கம்பியில்லா தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளதாக சம்சுங் எலக்ட்ரோனிக்ஸ் அறிவித்துள்ளது. இதன்மூலம் இரண்டு கிலோமீற்றர் தொலைவினுள், செக்கனுக்குள் 1 ஜிகா பைட் தரவுப் பரிமாற்ற வேகம் சாத்தியப்பட்டுள்ளதாக சம்சுங் தெரிவிக்கின்றது. எனினும் இது தற்போது பரீட்சார்த்தஅளவிலேயே உள்ளது. இதன் மூலமாக முப்பரிமாண திரைப்படங்கள், கேம்கள், அல்ட்ரா எச்.டி ரியல் டைம் ஸ்ட்ரீமிங் ஆகிய வற்றை எவ்வித தங்கு தடையுமின்றி மேற்கொள்ள முடியுமென சம்சுங் தெரி விக்கின்றது.



தற்போது பாவனையில் உள்ள 4ஜி வலையமைப்பை விட 5ஜி பல மடங்கு வேகமானதாகும். கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 4ஜி தொழில்நுட்பம் பாவனையில் உள்ளது. குறிப்பாக தென் கொரியாவில் சுமார் 20 மில்லியன் 4ஜி பாவனையாளர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகளாவிய இணையப் பாவனை சில தகவல்கள்!




இன்ரநெற் பயன்படுத்தும் மக்கள் எண்ணிக்கையில், உலக அளவில், சீனா முதலிடத்திலும் அதையடுத்து அமெரிக்கா, இந்தியாவும் உள்ளன.

தற்போது, ஸ்மார்ட் போன் பயன்பாடு அதிகரித்து வருவதால், இன்ரநெற் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது. உலக அளவில், 270 கோடி மக்கள் இன்ரநெற் பயன்படுத்துகின்றனர். உலக மக்கள் தொகையுடன் இதனைக் கணக்கிடுகையில், இது 39 சதவீதம் ஆகும். இந்த வகையில், சீன மக்களில், 40சதவீதம் பேர் இன்ரநெட் பயன்படுத்தி வருகின்றனர். இதுவே, பன்னாட்டளவில், அதிக பயன்பாட்டு விகிதம் ஆகும். அங்கு 51 கோடியே 10 இலட்சம் பேர் இணையப் பயனாளர்களாக உள்ளனர். அமெரிக்காவில் 24 கோடி பேர் இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தியாவை அடுத்து, அதிகமாக இணையம் பயன்படுத்துவோர் வாழும் நாடு ஜப்பான் மற்றும் பிரேசில் ஆகும்.

ஒரு நாட்டின் மக்கள் தொகை அடிப்படையில், அதிக இணையப் பயன்பாடு உள்ள நாடு எது என்று பார்க்கையில், ஐரோப்பா மொத்தமாக 75 சதவீத பயன்பாட்டுடன் முதல் இடத்தைப் பெறுகிறது. அடுத்து அமெரிக்கா 61 சதவீதப் பயன்பாட்டுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் ஆண்களே அதிகம் (41%) இன்ரநெற்றைப் பயன்படுத்துகின்றனர். பெண்களில் 37% பேர். உலக சனத்தொகையில் இது 103 கோடி பெண்கள் மற்றும் 105 கோடி ஆண்கள் எனக் கணக்காகிறது.

# Micromax A120 Canvas செல்பேசி!



Micromax நிறுவனம் தற்போது A120 Canvas எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. 1920 ஒ 1080 Pixel Resolution மற்றும் 5.5 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது கூகுளின் Android 4.2.1 Jelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2GHz வேகத்தில் செயலாற்றும் Quad-Core Cortex A7 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகிவற்றினைக் கொண்டுள்ளதுடன் சேமிப்பு நினைவகமாக 8GB கொள்ளளவு காணப்படுகின்றது. இச்சேமிப்பு நினைவகத்தினை 64GB வரை அதிகரிப்பதற்காக microSD கார்ட் வசதியும் தரப்பட்டுள்ளது.

இவற்றுடன் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா மற்றும் 3.2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா ஆகியனவும் தரப்பட்டுள்ளன. 370 டொலர்கள் பெறுமதியான இக்கைப்பேசிகளில் இரட்டை சிம் பயன்படுத்தும் வசதியும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பான முறையில் புளூடூத் சில வழிமுறைகள்!



* நாம் கணனிகள், பொழுது போக்கு சாதனங்கள், தொலைபேசி ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது அவை தங்களுக்குள் பல வகைகளில் இணைத்துக் கொள்கின்றன. பல வித வயர்கள், கேபிள்கள், ரேடியோ சிக்னல்கள், இன்ப்ரா ரெட் கதிர்கள் எனப் பல வகைகளில் இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் புளூடூத் சாதனங்களை இணைப்பதில் தனி வழி கொண்டுள்ளது. குறைந்த மின் சக்தி பயன்பாடு, ஒரே நேரத்தில் எட்டு சாதனங்களுடன் தொடர்பு, எந்த வகையிலும் ஒன்றுக்கொன்று குறுக்கிட்டு செயல் இழக்காத நிலை, இணைந்திடும் சாதனங்கள் நேராக இருந்திடத் தேவையற்ற நிலை, 32 அடி வட்டத்தில் புளூடூத் தொழில் நுட்பம் கொண்ட எந்த சாதனத்தையும் கண்டு இணையும் லாகவம் எனப் பல சாதகங்களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

* புளூடூத் இயக்கப்பட்ட சாதனங்கள் அவற்றின் எல்லைகளுக்குள் இருக்கையில் யாரும் இயக்காமலேயே ஒன்றையொன்று புரிந்து கொள்கின்றன. முகத்தைமூடிய நிலையிலும் கண்களை மட்டுமே கண்டுரோயோவை ஜூலியட் அடையாளம் கண்டது போல புளூடூத் உள்ள சாதனங்கள் ஒன்றையொன்று கண்டு கொள்கின்றன. ஒரு எலக்ட்ரோனிக் உரையாடல் அவற்றுக்குள் ஏற்படுகிறது. இந்த சாதனங்களைப் பயன்படுத்துபவர் எந்த பட்டனையும் இதற்கென அழுத்த வேண்டியதில்லை. இந்த எலக்ட்ரோனிக் உரையாடல் இரண்டு அல்லது மூன்று சாதனங்களுக்கிடையே ஏற்பட்டவுடன் (அவை கணனி சிஸ்டமாகவோ, மொபைல் போனாகவோ, ஹெட்செட் ஆகவோ, பிரிண்டராகவோ இருக்க லாம்) அந்த சாதனங்கள் தங்களுக்குள் ஒரு நெற்வேர்க்கினை ஏற்படுத்திக் கொள்கின்றன.



* இதை பெர்சனல் ஏரியா நெற்வேர்க் எனக் கூறலாம். ஆங்கிலத்தில் இந்த நெற்வேர்க்கை PAN அல்லது piconet என அழைக்கின்றனர். இரண்டிற்கு இடையே ஏற்படும் இந்த நெற்வேர்க் அதே அறையில் மற்ற இரண்டிற்கு இடையே ஏற்படும் நெற்வேர்க்கால் பாதிக்கப்படுவதில்லை. இணைப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்த இரண்டு சாதனங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் ஏற்படுகிறது. எடுத்துக் காட்டாக புளூடூத் ஹெட்செட்கள் உங்களுடைய மொபைல் போன், ரேடியோ ஆகியவற்றுடன் வயர் எதுவுமின்றி இணைப்பு கொடுத்து செயற்பட வைக்கின்றன.

* பிரிண்டர்களும் புளூடூத்தொழில் நுட்பத்தில் இயங்கும் வகையில் இப்போது வடிவமைக்கப்படுகின்றன. உங்கள் மொபைல்போனில்போட்டோ ஒன்று எடுத்த பின்னர் பிரிண்டரையும் மொபைல் போனையும் புளூடூத் மூலம் இணைப்பை ஏற்படுத்தினால் போதும். மற்றும் மொபைல் போனை புளூடூத் மூலம் கணனியுடன் இணைத்து பைல்களை அப்டேட் செய்திடலாம். புளூடூத் வசதி கொண்ட கீ போர்ட்களும் இப்போது வந்துவிட்டன.

* உங்கள் மொபைல் போனில் புளூடூத்தை இயக்கிவிட்டு சிறிது தூரம் காரிலோ ஸ்கூட்டரிலோ செல்லுங்கள். ஏதாவது இன்னொரு புளூடூத் சாதனம்



குறுக்கிட்டு இணைப்பை ஏற்படுத்தும். உங்கள் போன் திரையில் இது போல ஒரு சாதனம் இந்த பைலை அனுப்பவா என்று கேட்கிறது? ஏற்றுக் கொள்கிறாயா? என்ற கேள்வி இருக்கும். உடனே இணைப்பைக் கட் செய்வதே நல்லது. ஏனென்றால் இது போலவரும்பைல்களில்வைரஸ் இருக்கும். எனவே தான் இணைப்பு இருந்தாலும் பைலை ஏற்றுக்கொள்ளும் அனுமதியை நாம் தரும்படி மொபைல் போனின் புளூடூத் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புளூடூத் மூலம் அடுத்த சாதனங்களைக் கைப்பற்றிக் கெடுப்பதை "bluejacking" "bluebugging" மற்றும் "Car Whisperer" என அழைக்கின்றனர். எனவே நம்பிக்கையான நபர் அல்லது மொபைல் போன் அல்லது சாதனம் என்று உறுதியாகத் தெரிந்தாலொழிய இத்தகைய இணைப்பை அனுமதிக்கக் கூடாது.

# கலையரங்கத்தை புனரமைக்கக்கோரி
# வரியிறுப்பாளர் சங்கம் மகஜர் கையளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்கரையில் அமைந்துள்ள வடமராட்சியின் புகழ்பெற்ற பருத்தித்துறை கடற்கரை மைதானத்தையும் அழகுபடுத்துவதுடன் கலையரங்கத்தை புணரமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர் சங்கம் பருத்தித்துறை நகரசபையைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக வரியிறுப்பாளர் சங்கம் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா இரவீந்திரனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வரியிறுப்பாளர்களிடமிருந்து நகரசபையின் வரிசேகரித்தல் நடவடிக்கைகள் வட்டார ரீதியாக நடமாடும் சேவை மூலமாகவும் வரிசேகரிப்பாளர் மூலமாகவும் குறிக்கப்பட்ட காலத்திற்குள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வரியிறுப்பாளர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது சம்பந்தமாகவும், காணிச் சொந்தக் காரர்களின் பெயர் மாற்றம் சம்பந்தமாகவும் அவற்றினைச் செய்து முடிக்கக்கூடிய கால விபரங்கள் அடங்கிய பட்டியல் நகரசபை அலுவலகத்தில் வரியிறுப்பாளர் பார்வைக்கு வைக்கப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இச் செயற்பாடுகளுக்கு ஆளணி உதவிகள் தேவைப்படின் வரியிறுப்பாளர்சங்கம் வழங்கி உதவ ஆயத்தமாகவுள்ளது.

நகரசபைக்குச் சொந்தமான வீதிகளின் பெயர்கள், தரம், நீளம், அகலம், வீட்டிலக்கம், மதகுகள், வீதிகளின் வடிகால மைப்புஉளளிட்ட விபரங்கள் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் நகர விளையாட்டு மைதானத்தைத் தரம்வாய்ந்த விளையாட்டு மைதானமாகப் புனரமைப்புச் செய்யவேண்டும்.

பருத்தித்துறையில் நகர மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டும். தற்போதைய சந்தை நிலவரத்தின்படிகாணிகளின் விலைகள் குறைந்த நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே, நகரமண்டபத்தை நிர்மாணிப்பதற்கான காணியொன்றை கொள்வனவு செய்ய வேண்டும் காணியிருந்தால் எப்போதாவது நகரமண்டபத்தை நிர்மாணிக்க முடியும்.

பருத்தித்துறை நகரசபைக்கான கட்டடம், நகரசபைப் பொது நூலகக் கட்டடம், மக்கள் சந்தைக்கட்டடம் என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. மேலும் நகரசபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற புதிய நிர்மாண வேலைகள் பற்றியும் செயற்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றிய விபரங்களை வரியிறுப்பாளர்களுக்கு அறியத்தரவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

# வாழைப்பழத்தின் விலை தென்மராட்சியில் சரிவு

(கொடிகாமம்)

தென்மராட்சி கொடிகாமம் பொதுச்சந்தையில் தற்போது வாழைப்பழம் திடீர்விலை வீழ்ச்சி அடைந்துள்ளது கடந்த சில நாட்களாக 60 முதல் 70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட கதலி வாழைப்பழம் 35 முதல் 40 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இவ்விலைச் சரிவு பற்றி வியாபாரிகள் தெரிவிக்கையில் இன்னும் சில நாட்கள் மட்டுமே இந்த நிலை தொடரும் எனவும் அடுத்து வரும் மாதங்களில் ஆலய உற்சவங்கள் ஆரம்பமாக உள்ளதால் திடீர் என விலை உயர்வு அடைய வாய்ப்புள்ளதாக கருத்து வெளியிட்டனர். (150)

# இளவயதுத் திருமணம்; சிறுமி நன்நடத்தைப் பிரிவில்

(கரணவாய்)

சிறுவயதில் காதல் திருமணம் செய்து கொண்ட சிறுமியை சிறுவர் நன்நடத்தைப் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறையைச்சேர்ந்த 14 வயதான குறித்த சிறுமியை 18 வயது இளைஞன் ஒருவன் காதலித்து திருமணம் செய்து கொண்டு மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்திற்கு அழைத்து வந்து வாழ்ந்துள்ளார்கள்.

இந்நிலையில் பெற்றோருக்கு இவ்விடயம் தெரிய வந்ததைஅடுத்து அவர்கள் நெல்லியடி பொலிஸாரிடம் முறையிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மிருசுவில் பகுதிக்குச்சென்று சிறுமி இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து இருவரையும் சாவகச் சேரி நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.

இதன் விசாரணையை மேற்கொண்டதன் பின்னர் சாவகச் சேரி நீதிமன்ற நீதிபதி குறித்த சிறுமியை சிறுவர் நன்நடத்தை பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறும் இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (18)

# கழிவுக் கால்வாய்களை சுத்தப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் குறிப்பாக வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கடைத் தொகுதிகளுக்கு முன்பாகக் காணப்படும் சிறிய கழிவு வாய்க்காலானது சேறும் சகதியுமான நிலையில் நீர் வழிந்தோட முடியாத நிலையில் கழிவுப் பொருட்களுடன் அடைபட்டுக் காணப்படுகிறது. நீண்ட நாட்களாக குறித்த வாய்க்காலில் கழிவுகள் அகற்றப்படாது பொலித்தீன் பைகள், வெற்றுப்போத்தல்கள் போன்றவற்றுடன் காணப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் கடைத்தொகுதிகளுக்கு முன்பாகக் காணப்படும் சிறியகழிவு வாய்க்காலினை சுத்தம் செய்து நீர் தேங்கி நிற்காது கழிவுப்பொருட்களை அகற்றி நீர் வழிந்தோட வழி செய்யுமாறு பாதசாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)



கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ஆசிரியை திருமதி சி.இராஜினிதேவியின் "நிலவும் சுடும்" சிறுகதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வின் போது நிகழ்வின் தலைவரும் பாடசாலை அதிபருமாகிய இ.இராசசேகரம் மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் நூலின் அறிமுக உரை ஆற்றுவதையும் காணலாம். (03)

# பதிவிறக்கப் பெட்டகம்

"பச்சையரிசி பச்சையாக இருப்பதில்லை ஏன்?"
"கைக்குத்தல் அரிசி கையைக் குத்துவதில்லையே அதனால்!"

*** *** *** ***

"தினமும் காலையும் மாலையும் வந்து பொலிஸ் ஸ்ரேஷன்ல கையெழுத்துப் போட்டுட்டுப் போகோணும் தெரியுதா?"
"சரி ஐயா... பிறகு வழக்கம்போலத் திருடப் போகலாமா...?"

*** *** *** ***

"உங்களை முட்டாள் என்று திட்டிவிட்டுப் போகிறார். நீங்கள் எப்படி அவரைப் புத்திசாலி என்று சொல்கிறீர்கள்?"
"புத்திசாலியான என்னை அவர் முட்டாள் என்று அழைக்கும் போது, முட்டாளான அவரை நான் புத்திசாலி என்று அழைக்கக் கூடாதா?"

*** *** *** ***

"வானம் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தால்...?"
"ஏரோப்பிளேன்கள் இடுப்பைச் சுற்றிப் பறக்கும்!"

*** *** *** ***

**நிருபர்:** "உங்கள் காலைச் சாப்பாடு எப்படி?"
**நடிகர் எம்.ஆர்.ராதா பதில்:** "நான் என்ன நடிகையா, இந்தக் கேள்வியெல்லாம் கேட்கிறியே... பசிச்சா பத்து இட்லி இல்லேன்னா பட்டினின்னு எழுதிக்கோ போ...!"

*** *** *** ***

**நிருபர்:** "உங்களிடம் இப்போது என்னென்ன படங்கள் கைவசம் இருக்கின்றன?"
**நடிகர் நாகேஷ் பதில்:** "முருகன் படம், ராமர் படம், திருவள்ளுவர் படம், பாரதியார் படம்... இதுமாதிரி நிறையப் படம் இருக்கு!"

*** *** *** ***

"நான் முன்னேறத் துடிக்கிறேன். ஆனால் முன்னோக்கி ஓரடி வைக்கும்போதெல்லாம் இரண்டடி சறுக்குகிறது. நான் எப்படி முன்னேறுவது?"
"பின்பக்கமாக நடந்து பாருங்கள்!"

*** *** *** ***

"உங்களை எரிச்சலூட்டுவது எது?"
"நிலைக்கண்ணாடி!"

*** *** *** ***

"மரணத்தை ஒத்திப்போட என்ன வழி?"
"சிரியுங்கள்!"

*** *** *** ***

"நான் கொடுத்த மருந்திலே ஏதாவது சேஞ்ச் இருந்ததா?"
"போத்தலைக் காலி பண்ணிக்கூடப் பார்த்திட்டேன் டாக்டர், ஒரு ஐம்பது சதம் கூட இல்லை..!"

*** *** *** ***

"ஹலோ, டாக்டர் நான் உங்களப் பார்க்க வரணும். நீங்க எப்ப ஃப்ரீ?"
"எப்ப வந்தாலும் ஃப்ரீ இல்லை. ஃபீஸ் வாங்குவேன்"

*** *** *** ***

"இன்றைக்கு ஸ்கூல்ல விவாத அரங்கு இருக்கு. பங்கேற்கிற எல்லாருக்கும் அவரவருடைய அறிவுதான் ஆயுதம். நானும் கலந்துகொள்ளப் போகிறேன்..."
"நீ அபார தைரியசாலிதான், நிராயுதபாணியாகவே கலந்து கொள்கிறாயே!"

*** *** *** ***

"என் ஜாதகப்படி எனக்கு அறிவு மிகவும் அதிகமாம் தெரியுமா?"
"இப்பவாவது தெரியுதா? நான் ஏன் ஜாதகத்தை நம்புறேல்லையென்று"

*** *** *** ***

"என்னடாப்பா காய்ச்சல், காய்ச்சல் என்று டாக்டரிடம் போனாயே... டாக்டர் என்ன சொன்னார்?"
"அவரும் காய்ச்சல்தான் என்று ஒத்துக்கொண்டார்"

*** *** *** ***

"நான் லண்டனுக்குப் போய் வரலாமென்று நினைக்கிறேன். எவ்வளவு செலவாகும்?"
"நினைக்கிறதுக்கெல்லாம் ஒண்டும் செலவாகாதுங்க!"

*** *** *** ***

"மாணவர்களே! இப்ப சந்தேகம் ஏதும் இருந்தால் கேளுங்கள்"
"சேர், வகுப்பு தொடங்குறதுக்கு முன்னம், பேசாமல் இருங்கோ, ஊசி விழுகிற சத்தம் மட்டும்தான் கேட்கோணும் எண்டு சொன்னீங்கள்... ஊசி விழும் சத்தம் கேட்கவே இல்லையே? நீங்கள் ஊசியைப் போட்டீங்களா, இல்லையா?"

# புலிகளின் பெயரால் கப்பம் பெற்றவர்
## யாழ்.நகரில் நேற்று கைது



(யாழ்ப்பாணம்) விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட தலைவர் எனக்கூறி சுமார் 12 இலட்சம் ரூபாவை கப்பமாக பெற்ற பிரதான சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாக யாழ்.சிறு குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ. டபிள்யு. எல்.விக்கிரமாரச்சி நேற்று தெரிவித்தார். கிளிநொச்சி பரந்தன் சந்திப் பகுதியில் கடந்த 3ஆம் திகதி யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான விஷேட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் திருநகர் மேற்கு கிளிநொச்சி மற்றும் குருக்கள் வீதி கோப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இருவரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் 3 மாத கால தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, பொலிஸ் விசாரணை இடம்பெறுவருகின்றது. இந்த விசாரணையின் பின்னரே முகமாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை இன்று கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இவர் யாழ்.மாவட்ட சுகாதார திணைக்களத்தில் சாரதியாக கடமையாற்றி வருகின்றனர். முன்னர் கைதுசெய்யப்பட்ட இருவருடன் இணைந்து, வியாபார நிலையங்களில் கப்பம் பெறுவதற்கு முழு உதவிகளையும் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர் யாழ். சுகாதார திணைக்களத்தில் கடமையை முடித்துக்கொண்டு வெளியே வந்த வேளை, யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பாக வைத்து கைதுசெய்ததாகவும், கைதுசெய்யப்பட்டுள்ள இவரை யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் யாழ். சிறு குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி நேற்றுக்காலை தெரிவித்தார்.

# தேயிலை உற்பத்தி; இலங்கைக்கு 2 ஆம் இடம்



(கொழும்பு) இந்த வருடத்தின் ஜனவரி தொடக்கம் மார்ச் வரையான முதற் காலாண்டில் சர்வதேச அளவில் கறுப்புத் தேயிலை உற்பத்தி, 18.18 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கறுப்புத் தேயிலை உற்பத்தி கடந்த வருடத்தின் இதே காலாண்டில், 26.48 கோடி கிலோவாக இருந்த நிலையில் இவ்வருடம் முதற் காலாண்டில் 31.48 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

இந்தக் காலாண்டில் கென்யாவின் கறுப்புத் தேயிலை உற்பத்தி, 4.48 கோடி கிலோவிலிருந்து, 11. 73 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

இதையடுத்து, கறுப்புத் தேயிலை உற்பத்தியில், கென்யா முதலிடத்தைப் பிடித்துள்ளது இதையடுத்து, இலங்கை, 8.02 கோடி கிலோ கறுப்புத் தேயிலையை உற்பத்தி செய்து, இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவின் கறுப்புத் தேயிலை உற்பத்தி, 49.30 இலட்சம் கிலோ அதிகரித்து, 7.92 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. உலகளவில், இந்தோனேஷியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைத் தவிர்த்து, ஏனைய நாடுகளில், கறுப்புத் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. மாலைதீவு நாட்டில், கறுப்புத் தேயிலை உற்பத்தி, 36 இலட்சம் கிலோ சரிவடைந்து, 1.77 கோடி கிலோவாகவும், இந்தோனேஷியாவில் இதன் உற்பத்தி, 20 இலட்சம் கிலோ குறைந்து, 1.37 கோடி கிலோவாகவும் சரிவடைந்துள்ளது.

# நிலுவை வேதனம் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும்



(கொழும்பு) கடந்த ஏழு ஆண்டுகளாக ஆசிரியர்கள் எதிர்பார்த்திருந்த நிலுவைச்சம்பளம் மிகவிரைவில் வழங்கப்படவுள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள நிலுவைகிடைக்காத ஆசிரியர்களுக்கான நிலுவை வேதனம் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதற்காக, 27 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், கடந்த ஏழு வருட காலமாக இழுபறி நிலையில் இருந்த ஆசிரியர்களின் வேதன நிலுவை குறித்த பிரச்சினைகள் இதன் மூலம் தீர்க்கப்படவுள்ளன.

இதற்கமைய, தேசிய மாகாண மற்றும் பிரிவென பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், பாடசாலைகளில் சேவையாற்றும் 3 ஆயிரத்து 918 ஆசிரியர்கள் நன்மை பெறவுள்ளனர்.

ஏனைய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுக் காசோலைகள் விரைவில் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொதுமக்களின் முதுகில் அமைச்சர்கள் சவாரிசெய்வதா?
## ஜே.வி.பி.போர்க்கொடி



(கொழும்பு)

பொதுமக்களின் முதுகில் அமைச்சர்கள் சவாரி செய்வதை அனுமதிக்க முடியாது என்று ஜே.வி.பி.குற்றம் சாட்டியிருக்கிறது.

உதாரணமாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல வின் மார்ச் மாத வீட்டு மின்சாரக் கட்டணம் 121114 ரூபா என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது. அமைச்சரின் தனிப்பட்ட வீட்டுப் பாவனை மின் கட்டணத்தை அரசாங்கம் பொது மக்கள் பணத்திலிருந்து செலுத்தி வருவதாக ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டணமானது அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்கானது அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. மின்சாரக் கட்டணத்தை அரசாங்கம், மின்சார சபைக்கு செலுத்தி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கான மின்சாரக் கட்டணத்தை பொதுமக்கள் பணத்திலிருந்து செலுத்துவதனை ஜனாதிபதியும், அமைச்சர்களும் நிறுத்த முடியுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய மின்சாரக் கட்டண உயர்விற்கு எதிராக மக்கள் நிச்சயமாக போராட்டம் நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். புதிய மின்சாரக் கட்டணக் குறைப்புத் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சாரம் தொடர்பிலான அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளே நாடு இன்று பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்க ஏதுவாக அமைந்துள்ளது என கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொழும்பில் மூன்று அடுக்கு பாதுகாப்பு

(கொழும்பு) கொழும்பில் நேற்று மூன்று அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. யுத்த வெற்றிவிழா கொண்டாட்டங்களைக் கருத்திற் கொண்டே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் என்று கருதப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து குறித்த சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய குற்றச்சாட்டின் பேரில் இரு வரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக இருவரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர், மற்றையவர் சில காலம் சிறைத்தண்டனை அனுபவித்தவர். புறக்கோட்டை பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த இருவரும் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளனர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கள்ளநோட்டு அச்சிட்டவர் கைது

..போலி நாணயத்தாள்களை அச்சிட்டதாக எட்டியாந்தோட்டை பகுதியில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும், போலி நாணயத்தாள்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர் என அடையாளப்படுத்தப்படும் ஒருவருடைய அடையாள அட்டையும் அந்த இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எட்டியாந்தோட்டை பகுதியில் இயங்கி வந்த விற்பனை நிலையமொன்றிலேயே போலி நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

# புயலுக்குப்பெயர் சூட்டியது தவறு; ஒப்புக்கொள்கின்றனர் அதிகாரிகள்

(கொழும்பு) சூறாவளி காற்றுக்கு சூட்டுவதற்கு இலங்கையினால் பிரேரிக்கப்பட்டுள்ள பெயர்களை மீளாய்வு செய்ய வளிமண்டலவியல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த வாரத்தில் வங்காள விரிகுடாவில் உருவாகியிருந்த சூறாவளிக்கு சூட்டப்பட்டிருந்த பெயர் குறித்து பல்வேறு தரப்பினரிடம் இருந்து ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டிருந்ததாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.காரியவசம் தெரிவித்துள்ளார்.

இனிமேல் அவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக ஏற்கனவே பிரேரிக்கப்பட்டுள்ள பெயர்களை மீளாய்வு செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச வானிலை அவதான மையத்தின் கண்காணிப்பின் கீழ் இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள நாடுகளின் வளிமண்டலவியல் ஆய்வு நிலையங்களின் பிரதிநிதிகள் அடங்கிய உபகுழுவினால் சூறாவளி காற்றுக்கு பெயர்கள் சூட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய இந்து சமுத்திரத்தின் வடக்கே சூறாவளிக் காற்று உருவாகின்ற சந்தர்ப்பங்களில் முன்மொழியப்பட்டுள்ள பெயர்களின் வரிசைக்கு ஏற்ப புதுடில்லியில் அமைந்துள்ள பிராந்திய விஷேட வானிலை அவதான நிலையத்தினால் பெயர் சூட்டப்படுகிறது.

# வெடிகுண்டுகளை களஞ்சியப்படுத்தினாரா?
## சிங்களக் கிராமவாசிக்கு சிறை

(கொழும்பு) அதிரடிப்படையினரைத்தாக்க வெடிகுண்டுகளைக் களஞ்சியப்படுத்திய சிங்களக் கிராமவாசிக்கு பத்துவருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவிகளை வழங்கிய இக்கிராமவாசிக்கு பத்து ஆண்டு கால சிறைத்தண்டனையை பதுளை உயர் நீதி மன்ற நீதவான் சம்பத் பீ.அபே குணவர்தன விதித்துள்ளார்.

மேற்படி வழக்கு விசாரணைகள் மொனராகல உயர் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குறித்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டு நீண்ட காலம் விசாரணை நடத்தப்பட்டது. கிம்புல்யாய என்னும் கிராமத்தைச் சேர்ந்த திஸாநாயக்க முதியன்சேலாகே திஸாநாயக்க என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் பயணம் செய்யும் பேருந்து மீது குண்டுத் தாக்குதல் நடாத்த முயற்சி செய்ததாகவும், அதற்கான வெடி பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததாகவும் தெரிவித்து 2009ஆம் ஆண்டில் திஸாநாயக்க கைது செய்யப்பட்டிருந்தார்.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## I.C.T

### பகுதி - 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) கணனியின் மூளை என அழைக்கப்படுவது எது?

2) Recycle bin என்றால் என்ன?

3) C.P.U வில் அதிகளவான தகவல்களை சேமிக்கப் பயன்படும் வன்பொருள் எது?

4) W.W.W. என்பதன் விரிவாக்கம் என்ன?

5) RAM இன் விரிவாக்கம் என்ன?

6) 2 ஆம் தலைமுறையில் உள்ளீடாகப் பயன்படுத்திய பொருள் என்ன?

7) 3 ஆம் தலைமுறையில் உள்ளீடாகப் பயன்படுத்திய மொழி என்ன?

8) 1 ஆம் தலைமுறையில் உள்ளீடாகப் பயன்படுத்திய மொழி என்ன?

9) உள்ளீட்டுக் கருவிக்கு உதாரணம் தருக?

10) தன்னியக்க காசளிப்பு இயந்திரத்தின் விரிவாக்கம் என்ன?

11) கணனியின் வேகம் அளக்கப் பயன்படும் அலகு என்ன?

12) CD என்பதன் விரிவாக்கம் என்ன?

13)
```
 1 1 1 0 0
   1 1 0 1  -
 _________
```

14)
```
 1 0 1 1 0 1
 1 1 0 1 0 1  +
 ___________
```

15)
```
 1 0 1
 1 0 1  x
 _____
```

### பகுதி - 2

எவையேனும் 4 வினாக்களுக்கு விடை தருக?

1. வணிகத்தில் இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்கள் பிரபலமாகவுள்ளது.
   1) மின் வணிகம் என்பதனால் கருதப்படுவது யாது?
   2) மின் வணிகம் என்பதனால் கருதப்படுகின்ற முக்கியமான விடயங்கள் யாவை?
   3) சுருக்கமாக விளக்குக.
      1) Web site
      2) Internet Service Provider (ISP)

2.
   1) "கணனி" என்ற பதத்திலிருந்த நீர் விளங்கிக் கொள்வது யாது?
   2) கணனி வலைப்பின்னல் என்றால் என்ன? நான்கு Net Work Topology இனைத் தருக?
   3) e - Government என்றால் என்ன?
   4) மின்னஞ்சல் பயன்படுத்தப்படுகின்ற முக்கியமான விடயங்கள் தருக.

3. கல்விச் சுற்றுலாவிற்கான பிரதம ஒழுங்கமைப்பாளர் எனக் கருதி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் வினாவிற்குப் பொருத்தமான மென்பொருள் பொதியை தருக.
   1) மாணவர்களின் பெற்றோருக்கு நிகழ்ச்சி பற்றி அறிவிப்பதற்கு கடிதங்கள் தயாரிக்குக.
   2) சுற்றுலாவின் பாதீட்டைத் தயாரிக்குக.
   3) சென்று பார்வையிட வேண்டிய இடங்கள் பற்றிய ஓர் அறிக்கையை சமர்ப்பிக்க.
   4) தரவு என்றால் என்ன?

4.
   1) கணனியின் எண்ணக்கரு வரிப்படத்தை வரைக.
   2) மையச் செயலாக்கல் அலகு என்றால் என்ன?
   3) இரும எண்களை பதினாறும் எண்களாக மாற்றுக.
      1. 1110 1111 1100 $1001_2$
      2. 0100 1001 1011 $1110_2$
      3. 0001 1110 0100 $1001_2$
      4. 1111 1000 1011 $010_2$
      5. 1011 0101 1101 $0010_2$
   4) எண்ம எண்ணில் இருந்து பதின்ம எண்ணுக்கு மாற்றுக.
      1) $676_8$ 2) $1234_8$ 3) $1213_8$ 4) $576_8$ 5) $256_8$

5.
   1) X OR GATE இன் வரைபடத்தையும் உண்மை அட்டவணையையும் தருக.
   2) சிறுகுறிப்பு எழுதுக.
      1. இலத்திரனியல் தபால்
      2. 3 ஆம் தலைமுறைக் கணனி
      3. கணனி வைரஸ் என்றால் என்ன? கணனியில் வைரஸ் பரவாமல் இருப்பதற்கு ஏற்படுத்த வேண்டிய வழி யாது? கணனியில் வைரஸ் பரவுவதற்கான காரணிகள் சில தருக.

## பொது அறிவு

1) இலங்கையின் தற்போதைய உயர்கல்வி அமைச்சர் யார்?

2) இலங்கையில் உள்ள மிக நீளமான பாலம் எது?

3) விக்கிலீக்ஸ் இணையதளத்தின் ஸ்தாபகர் யார்?

4) ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை உச்சிமாநாடு 2010 இல் எங்கு நடைபெற்றது?

5) சந்திராஜன் 1 எனும் விண்கலத்தை அனுப்பிய நாடு எது?

6) இந்தியாவின் முதல் விண்வெளி மங்கை யார்?

7) புனித நாடு என அழைக்கப்படுவது எது?

8) இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ்ப் படம் எது?

9) உலக விவசாய நிறுவனத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

10) UNESCO அமைப்பின் விரிவாக்கம் யாது?

11) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினை ஆரம்பித்தவர் யார்?

12) ICC தர வரிசைப்படுத்தல்படி டெஸ்போட்டிகளில் சிறந்த துடுப்பாட்ட வீரராக முதல் நிலையில் நிற்பவர் யார்?

13) 5 E என்னும் புதிய கற்பித்தல் முறையை கண்டறிந்தவர் யார்?

14) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கல்வித் தொலைக்காட்சி சேவையின் பெயர் என்ன?

15) ஐக்கிய நாடுகள் சபையின் பல்கலைக்கழகம் அமைந்துள்ள நகரம் எது?

16) Face book இன் ஸ்தாபகர் யார்?

17) ஐக்கிய நாடுகள் சபை 2011 ஆம் ஆண்டை என்ன ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது?

18) முஸ்லிம்களின் புனித பூமி என அழைக்கப்படும் இடம் எது?

19) கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ அலுவலகம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

20) அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் எது?

21) கணனியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

22) இரும்பு மனிதர் என அழைக்கப்பட்டவர் யார்?

23) இலங்கையில் அதிகுறைந்த மழைவீழ்ச்சி கிடைக்கும் இடம் எது?

24) ஐக்கிய நாடுகள் சபையின் 194 ஆவது நாடாக இணைந்த நாடு எது?

25) 2010 ஆம் ஆண்டு மருத்துவத்தில் நோபல் பரிசு பெற்றவர் யார்?

26) ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகத்தின் தாய் நாடு எது?

27) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பிரித்தானியத் துணை வேந்தர் யார்?

28) இலங்கையில் றேடர் அவதான நிலையம் எங்கு அமைந்துள்ளது?

29) சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?

30) அமெரிக்காவின் உழவுச் சேவையின் பெயர் என்ன?

31) இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தின் தலைமையகம் அமைந்துள்ள நாடு எது?

32) மொனலிஷா என்ற உலகப் புகழ்பெற்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?

33) கலாசார முக்கோண வலையங்கள் என அழைக்கப்படும் இலங்கையின் மாவட்டங்கள் எவை?

34) சர்வதேச மகளிர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

35) அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவை பற்றி தகவல்களை அறிய அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம் எது?

# இந்து நாகரிகம்

1) வேதங்களின் நான்கு பகுதிகளாவன
1) சங்கிதை, பிராமணம், வேதாங்கம், வேதாந்தம்
2) சங்கிதை, ஆரணியகம், உபநிடதம், உபவேதம்
3) பிராமணம், ஆரணியகம், வேதாங்கம், உபவேதம்
4) சங்கிதை, சனற்குமாரசங்கிதை, ஐதரேய பிராமணம், கடோபநிடதம்
5) சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம்

2) மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
1) தர்மன், கர்ணன், துரோணர், விதுரன், இராவணன்
2) வீஸ்மர், துருபதன், பாஞ்சாலி, காந்தாரி, துரோணர்
3) சந்தனு, பரதன், பாண்டு, குந்திதேவி, கோசலை
4) துரியோதனன், விராடராசன், வீமன், சுமந்திரன், நகுலன்
5) அபிமன்யு, அஸ்வத்தாமன், அர்ச்சுனன், கிருஷ்ணர், விசுவாமித்ரர்

3) மகாபுராணங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
1) பத்மபுராணம், கருடபுராணம், லிங்கபுராணம், தட்ஷணகைலாயபுராணம்
2) விஸ்ணுபுராணம், பிரம்மவைஹித்தபுராணம், திருச்செந்தூர்புராணம், கருடபுராணம்
3) பிரம்மபுராணம், கந்தபுராணம், பெரியபுராணம், மார்க்கண்டேய புராணம்
4) வாயு புராணம், அக்கினிபுராணம், மத்ஸ்யபுராணம், பத்மபுராணம்.
5) பாகவதபுராணம், விஸ்ணுபுராணம், சாந்திபுராணம், சேதுபுராணம்

4) சிவபெருமானின் திருவுருவங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
1) திரிபுராந்தகர், காலாரிமூர்த்தி, அநந்சயனர், மகாகாளர்
2) தட்ஷணாமூர்த்தி, சந்திரசேகரர், கஜசங்கரமூர்த்தி, திரிபுராந்தகர்
3) காலாந்தகர், மகாகாளர், தட்ஷணாமூர்த்தி, வல்லவமூர்த்தி
4) காமதகனர், நடராஜர், சந்திரசேகரர், கோபாலகிருஷ்ணர்
5) அந்தகாசுரன், சோமாஸ்கந்தர், வேணுகோபாலர், காலாந்தகர்

5) திருமுறைப்பாடல் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி
1) அருணகிரிநாதர், மாணிக்கவாசகர், சேக்கிழார், பட்டினத்தடிகள்
2) அப்பர், சுந்தரர், சேரமான் பெருமான், காரைக்கால் அம்மையார்
3) அப்பர், கல்லாடனார், சிவப்பிரகாசர், திருஞான்சம்பந்தர்
4) திருஞானசம்பந்தர், ஐயடிகள் காடவர்கோன், திலகவதியார், சோமாசிமாறனார்.
5) சேந்தனார், கருவூர்த்தேவர், சேக்கிழார், பெரியாழ்வார்.

6) அரசர்களின் நன்மைக்காகச் செய்யப்பட்ட ராஜகர்மாணி என்னும் கிரியை பற்றிக் கூறுவது (2008)
1) இருக்குவேதம்
2) யசுர்வேதம்
3) அதர்வணவேதம்
4) சாமவேதம்
5) மகாபாரதம்

7) பிரம்மசூத்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய விளக்கவுரை
1) வேதாந்ததீபம்
2) அத்வைதசூடாமணி
3) ஸ்ரீ பாஷயம்
4) வேதாந்தசங்கிரகம்
5) வேதாந்தசாரம்

8) ஆன்மாக்கள் மோட்சத்தில் அனுபவிக்கும் ஆனந்தத்தில்கூட அவைகளின் இயல்புக்கு தக ஏற்றத்தாழ்வு உண்டென்ற கொள்கை உடையவர்
1) இராமானுஜர்
2) சங்கரர்
3) ஸ்ரீஇராமகிருஷ்ணர்
4) மத்துவர்
5) ஸ்ரீ தயானந்தசரஸ்வதி

9) சிவவடிவங்களுக்குரிய அளவுப் பிரமானம்
1) பஞ்சதாலம்
2) உத்தம தசதாலம்
3) உத்தம நவதாலம்
4) மத்திம தசதாலம்
5) மத்திம நவதாலம்

10) இறைவனது அருவுருவத்திருமேனிகள் பற்றிக் குறிப்பிடும் தொகுதி(2007)
1) மகேஸ்வரன், தட்சணாமூர்த்தி, சிவம், சக்தி
2) சிவம், சக்தி, மகேஸ்வரன், உருத்திரன்
3) சிவம், சக்தி, நாதம், விந்து
4) நாதம், விந்து, பிரம்மா, உருத்திரன்
5) சிவன், மகேஸ்வரன், தட்சணாமூர்த்தி, உருத்திரன்

11) உபநிடதங்களைக் குறித்து நிற்கும் பெயர்
1) வேதாங்கம்
2) வேதாந்தம்
3) யோகாவாசிஷ்டம்
4) சதருத்திரியம்
5) பிரமவேதம்

12) உழவனுக்கும் வர்த்தகனுக்கும் தம்கருமங்களில் சித்தியையும், இன்பத்தையும் அளிக்கும் அதர்வணவேத மந்திரங்களைக் குறிக்கும் பெயர்
1) பேஷயானி
2) அபிசாரணி
3) பௌஷ்டிகாணி
4) ஆப்ரீசூக்தம்
5) ரோகிதசூக்தம்

13) வேதகால மக்களது செல்வத்தை அளவிடுவதற்கு உதவியது
1) பணம்
2) காணியளவு
3) பசு
4) தங்கம்
5) வெள்ளி

14) ஆதியும் அந்தமும் இல்லாத சிவதத்துவத்தை உட்பொருளாகக் கொண்ட வடிவம்
1) தட்ஷணாமூர்த்தி
2) கல்யாணசுந்தரர்
3) சோமாஸ்கந்தர்
4) இலிங்கோற்பவர்
5) பைரவர்

15) அவைதிக சமயங்கள் எனச் சுடப்படுபவை
1) வேதத்தை ஏற்று ஆகமத்தை ஏற்காதவை
2) வேதத்தை ஏற்றுக் கொள்ளாதவை
3) ஆகமத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்பவை
4) வேதத்தை அவ்வப்போது ஏற்றுக்கொள்பவை
5) வேதத்தை மட்டும் ஏற்றுக்கொள்பவை

16) வேதங்களில் வரும் தேவர்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
1) அக்கினி, வருணன், உருத்திரன், முருகன், சாவித்திரி
2) இந்திரன், விஸ்ணு, சூரியன், கணபதி, துர்க்கை
3) அக்கினி, உருத்திரன், சூரியன், மித்திரன், வருணன்
4) உஷா, பூசண், நாராயணர், குமார, சிவன்
5) சிவன், வருணன், சூரியன், சப்தமாதர், விஸ்ணு

17) இராமாயணக் கதாபாத்திரங்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி
1) தசரதன், சுமந்திரன், கோசலை, கைகேயி, பாஞ்சாலன்
2) வசிட்டர், ஜனகன், இராமர், நகுலன், விபீஷணன்
3) இராவணன், கும்பகர்ணன், தாடகை, பரதன், ஜானகி
4) இலக்குமணன், பரதன், சூர்ப்பனகை துரோணர், குகன்
5) அனுமன், அங்கதன், நீலன், சடாயு, விகர்ணன்

18) தர்மசாஸ்த்திரங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
1) கௌதம தர்மசூத்திரம், அர்த்தசாஸ்திரம், நாரதஸ்மிருதி, போதாயன தர்மசூத்திரம், பிரஹஸ்பதிஸ்மிருதி
2) காமசாஸ்த்திரம், போதாயன தர்மசூத்திரம், கௌதம தர்மசூத்திரம், சுக்கிரநீதி, நாரதஸ்மிருதி
3) சுக்கிரநீதி, விஸ்ணுஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம், மனுதர்மசாஸ்திரம்
4) மனுதர்மசாஸ்திரம், நாரதஸ்மிருதி, விஸ்ணுஸ்மிருதி, பிரகஸ்பதிஸ்மிருதி, சுக்கிரநீதி
5) சுக்கிரநீதி, மனுதர்மசாஸ்திரம், வசிஷ்டதர்மசூத்திரம், கௌதமதர்மசூத்திரம், நாரதஸ்மிருதி

19) பக்திசம்பந்தமான நூல்களும், பாடல்களும் அடங்கிய தொகுதி
1) உபநிடதங்கள், பகவத்கீதை, திருப்பல்லாண்டு, திருவாசகம், இராமாயணம்
2) பகவத்கீதை, கீதாகோவிந்தம், திருநீற்றுப்பதிகம், திருவிசைப்பா, திருப்புகழ்
3) கீதாகோவிந்தம், விஷ்ணுபுராணம், பிராமணங்கள், பொன்வண்ணத்தந்தாதி, திருவிளையாடற்புராணம்
4) அபிநயதர்ப்பணம், திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், திருவாரூர்மும்மணிக்கோவை திருக்கோவையார், கந்தபுராணம்
5) திவ்வியப்பிரபந்தம், திருவாரூர்ப்புராணம், பெரியதிருமொழி, கம்பராமாயணம், கூத்தநூல்

20) திருமாலின் அவதாரங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
1) மத்ஸ்ய, வாமன, கூர்ம, நரசிங்கர், கல்கி
2) வாமனம், கூர்மம், மத்ஸ்யம், அநந்தசயனர், கிருஸ்ணர்
3) நாராயணர், கிருஷ்ணர், நரசிங்கர், புத்தர், வியாசர்
4) மகாவிஸ்ணு, கிருஷ்ணர், இராமர், நரநாராயணர், வாதராயணர்
5) கல்கி, நாராயணர், கிருஷ்ணர், இராமர், வைகுந்தப்பெருமாள்

21) வேதங்களின் நான்கு பகுதிகளாவன
1) சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம்
2) சங்கிதை, சனற்குமாரசங்கிதை, ஐதரேயபிராமணம், கடோபநிடதம்
3) பிராமணம், ஆரணியகம், உபநிடதம், வேதாங்கம்
4) சங்கிதை, பிராமணம், வேதாந்தம், வேதாங்கம்
5) சங்கிதை, பிராமணம், உபவேதம், உபநிடதம்

22) மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர் அடங்கிய தொகுதி
1) பீஸ்மர், கைகேயி, மந்தரை, பாஞ்சாலி, விதுரன்
2) கிருஷ்ணர், அஸ்வத்தம்மா, தருமன், வீமன், துரியோதனன்
3) துரோணர், விதுரன், விபீசணன், தர்மன், கர்ணன்
4) பரதன், கோசலை, சந்தனு, பாண்டு, திரௌபதி
5) விராடராசன், சுமந்திரன், சல்லியன், குந்திதேவி, மந்தரை

23) மகாபுராணங்கள் என்னும் வகையில் அடங்கியவை
1) நாரதபுராணம், கருடபுராணம், விநாயகபுராணம், சேதுபுராணம்
2) கந்தபுராணம், பத்மபுரர்ணம், விஷ்ணுபுராணம், பாகவதபுராணம்
3) தணிகைபுராணம், சாந்திபுராணம், லிங்கபுராணம், அக்னிபுராணம்
4) அக்னிபுராணம், பத்மபுராணம், வாயுபுராணம், விஸ்ணுபுராணம்
5) மத்ஸயபுராணம், காஞ்சிபுராணம், வாயுபுராணம், விஷ்ணுபுராணம்

# சுருண்டது இங்கிலாந்து அணி



(லண்டன்)

லோர்ட்ஸ் மைதானத்தில் நடக்கும் முதல் டெஸ்டில் நியூசிலாந்து பந்துவீச்சாளர்கள் அசத்த, முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி 232 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி நியூசிலாந்து அணிப் பந்து வீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பேர்ஸ்டோவ் 41, ஜோ ரூ ட் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் சௌத்தி நான்கு, நீல் வோக்னர் மூன்று, ட்ரண்ட் பௌல்ட் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய நியூசிலாந்து அணி முதலிரு விக்கெட்டுக்களை விரைவாக இழந்து தடுமாறியது. தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்லர், வில்லியம்ஸன் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுமையாக ஆடியது. இந்த ஜோடி 93 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நியூசிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரெய்லர் 66, டீன் பிரவுன்லி 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். வில்லியம்ஸன் 44, கப்டன் பிரண்டன் மக்கலம் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதுள்ளனர். பந்து வீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதேவேளை, இரண்டாம் நாள் ஆட்டத்தில் வேகத்தில் மிரட்டிய இங்கிலாந்தின் அண்டர்சன் 3 விக்கெட் வீழ்த்தினார். இவர், நியூசிலாந்தின் புல்டனை வீழ்த்தியபோது, டெஸ்ட் அரங்கில் தனது 300ஆவது விக்கெட்டை பதிவு செய்தார். இதுவரை இவர், 81 டெஸ்டில் 301 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதன்மூலம் டெஸ்ட் வரலாற்றில் இம்மைல்கல்லை எட்டிய 4ஆவது இங்கிலாந்து பந்து வீச்சாளர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார். முன்னதாக இயன் போத்தம் (383), வில்லிஸ் (325), ட்ரூமேன் (307) ஆகியோர் இச்சிறப்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்லெடிகோ மட்ரிட் சம்பியன்



(மட்ரிட்)

கோபா டெல் ரே கால்பந்து தொடரில் அத்லெடிகோ மட்ரிட் அணி 10ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் கோபா டெல் ரே கால் பந்து தொடர் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில்அத்லெடிகோ மட்ரிட், ரியல் மட்ரிட் அணிகள் மோதின. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதல் கோல் அடித்தார். இதற்கு 35ஆவது நிமிடத்தில் அத்லெடிகோ மட்ரிட் அணியின் டியாகோ காஸ்டா ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1-1 என சமநிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் போராடிய இரு அணி வீரர்களால் கூடுதலாக ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின் இரு அணிகளுக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் அத்லெடிகோ மட்ரிட் அணியின் மிராண்டா, 98ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் அத்லெடிகோ மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, 10ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. ரியல் மட்ரிட் அணி 20ஆவது முறையாக 2ஆவது இடம் பிடித்தது.



# சூதாட்டம்; சிக்கலில் ரஹானே

(புதுடில்லி)

சூதாட்ட விவகாரத்தில் ராஜஸ்தான் அணியின் ரஹானே, ஹொட்ஜ் ஆகிய இருவருக்கும் தொடர்பிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இவர்கள் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சூதாட்ட பிரச்சினையில் சிக்கி காவலிலுள்ள அமித் சிங், மேலும் இரு ராஜஸ்தான் வீரர்கள் பெயர்களை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

கடந்த 2012 தொடரில், டில்லி–ராஜஸ்தான் அணிகள் மோதிய போட்டியில் சூதாட்டம் நடந்துள்ளது. டில்லியில் நடந்த இப்போட்டியில் டில்லியின் (152/6) இலக்கை நோக்கி ஆடிய ராஜஸ்தான் அணிக்கு, கடைசி 7 பந்தில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அப்போது பிராட் ஹொட்ஜ் ஆட்டமிழந்தார். அடுத்து கடைசிப்பந்தில் 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலை யில், பந்தை சந்தித்த ரஹானே (84 ஓட்டங்கள், 63 பந்து), அடிக்காமல் விக்கெட் காப்பாளரிடம் விட்டுவிட்டார். ஒரு ஓட்டம் எடுக்க ஓடி வந்த ஓவைஷா ரன் அவுட்டானார். கடைசியில் ராஜஸ்தான் அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோற்றது. இதில் ரஹானே, ஹொட்ஜ் என, இருவரும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக அமித் சிங் தெரிவித்தாராம்.

## பிரெட்லி விக்கின்ஸ் விலகல்

2013 ஆம் ஆண்டுக்கான டுவர் ஒப்இத்தாலிசைக்கிளோட்டப் போட்டிகளில் இருந்து சேர் பிரெட்லி விக்கின்ஸ் விலகியுள்ளார். இருதயத் தொற்றுக்களால் பாதிக்கப்பட்டுள்ளமையினால் அவர் போட்டிகளில் இருந்து விலகியுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. அவர் லண்டனுக்கு சிகிச்சைகளுக்காக அனுப்பிவைக்கப்படவுள்ளதுடன், விரைவில் போட்டிகளுக்குத் திரும்புவார் என எதிர்பார்ப்பதாக அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பிரெட்லி விக்கின்ஸ் ஏழு தடவைகள் ஒலிம்பிக் பதக்கங்களை வெற்றி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டம்




டில்லி டேர்டெவில்ஸ் எதிர்
புனே வாரியர்ஸ்
இடம்: புனே
மாலை 4.00 மணி

சன் ரைசர்ஸ் எதிர்
கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: ஹைதராபாத்
இரவு 8.00 மணி

# அரையிறுதியில் முன்னணி வீரர்கள்




(ரோம்)

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு ரபெல் நடால், ஜோகோவிச், ரோஜர் பெடரர், செரீனா உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் முன்னேறினர். இத்தாலியில் உள்ள ரோம் நகரில், இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் ஸ்பெயினின் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த டேவிட் பெரரை சந்தித்தார். முதல் செட்டை 6–4 என கைப்பற்றிய நடால், 2ஆவது செட்டை 4–6 என கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது சுற்றில் எழுச்சி கண்ட நடால் 6–2 என தன்வசப்படுத்தினார். இறுதியில் நடால் 6–4, 4–6, 6–2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், போலந்தின் ஜெர்ஜி ஜானோவிச்சை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய பெடரர் 6–4, 7–6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். மற்றொரு காலிறுதியில் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், செக்குடியரசின் தோமஸ் பெர்டிச்சை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6–2, 5–7, 4–6 என்ற செட் கணக்கில் போராடி தோல்வியடைந்தார்.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஸ்பெயினின் கார்லா சுயாரஸ் நவரோவாவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய செரீனா 6–2, 6–0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதியில் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசரை எதிர்கொண்டார். இதில் அசரன்கா 6–4, 1–6, 6–3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.



# வெற்றியுடன் வெளியேறியது பஞ்சாப்



(தர்மசாலா)

அசார் மொகமட், மார்ஷ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வெற்றியுடன் வெளியேறியுள்ளது. ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 69ஆவது லீக் ஆட்டம் நேற்று தர்மசாலாவில் நடைபெற்றது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் தமது கடைசி லீக் ஆட்டத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முதலிரு விக்கெட்டுக்களையும் ஆறு ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அசார் மொகமட், மார்ஷ் நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மளமளவென உயர்த்தினர். இந்த ஜோடி 148 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து பஞ்சாப் அணியின் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டபோதும் ஓட்டங்களையும் வேகமாகப் பெற்றன. இறுதியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அசார் மொகமட் 44 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 80, மார்ஷ் 47 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மலிங்க மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் இது வரையில் இடம்பெற்ற ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர்களில் 100 விக்கெட்டுக்களை சாய்த்த முதல் வீரர் என்ற சிறப்பைப் பெற்றார்.

பதிலுக்கு 184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, ஓட்டமெதுவும் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் முதல் விக்கெட்டை இழந்தது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் சிறப்பான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய மும்பை இந்தியன்ஸ் அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. மும்பை அணியின் வெற்றிக்கு இறுதியில் ஆறு பந்துகளில் 51 ஓட்டங்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் வெற்றி உறுதி என்ற நிலையில் இறுதி ஓவரை கப்டன் கில்கிறிஸ்ட் வீசினார். ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் அவர் வீசிய முதல் பந்திலேயே ஹர்பஜனின் விக்கெட்டை சாய்த்து சரித்திரம் படைத்தார். இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் காயம் காரணமாக குல்கர்னி துடுப்பாட களமிறங்கவில்லை. துடுப்பாட்டத்தில் ரோகித் சர்மா 25, ராயுடு 26, போலாட் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சால்வா, அசார் மொகமட், எஸ். சர்மா தலா இரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக அசார் மொகமட் தெரிவானார்.

# வடகொரியாவை பாதுகாக்க 200 ஏவுகணைகள் தயார்

## – இராணுவ ஆய்வில் தகவல்



வடகொரியாவில் 200 ஏவுகணைகள் வலம் வருவதாக இராணுவ ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

வடகொரியாவில் எதிர்பார்த்ததைவிட அதிகமான ஏவுகணைகள் இருக்கக்கூடும் என்று இராணுவத்தைப் பற்றி எடுக்கப்பட்ட ஆய்வுக் குறிப்பில் தெரியவந்துள்ளது.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனில் இருந்து வெளிவந்த தகவலை அடுத்து, கொரியாவின் பாதுகாப்பு ஆய்வு மையம் இதனைச் செய்துள்ளதாக ஊடகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

பொருளாதாரப் பிரச்சினைகளையும் மீறி வடகொரியா ஆயுதங்களில் முதலீடு செய்வதாக, அமெரிக்கா கருத்துத்தெரிவித்ததை அடுத்து அவர்களிடம் நகர்த்தக்கூடிய தன்மையுடன் 94 ஏவுகணைகள் இருக்கலாம் என்று தென்கொரிய அரசு நினைத்திருந்தது.


ஆனால், தற்போது வடகொரியாவில் குறைந்த தொலைவு சென்று தாக்கும் 150 ஏவுகணைகளும், குறிப்பிட்ட தொலைவு சென்று தாக்கும் 50 ஏவுகணைகளும் இருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு ஏவுகணைகளைத் தயார் நிலையில் வைத்திருந்து பின்னர், அதனை வடகொரியா வாபஸ் பெற்ற நிலையில் எழுந்த இந்த கருத்துக்கு பாதுகாப்பு ஆய்வு மையம் பதிலளிக்கவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் அணு சோதனையில் ஈடுபட்ட வடகொரியா தற்போது முசுடன் ஏவுகணைகளைப் பயன்படுத்தி புதிய பிரச்சினைகளை உருவாக்கலாம் என்று அமெரிக்க மற்றும் தென்கொரிய அதிகாரிகள் கருதுகின்றனர்.

உலகச் செய்திகள்

# அதிவேக இரயில்கள் மோதல்; அமெரிக்காவில் 50 பேர் காயம்



(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தண்டவாளத்தில் இருந்து விலகிச் சென்ற இரயில் மீது எதிரே வந்த இரயில் மோதியதில் 60 பேர் படுகாயமடைந்தனர். நியூயோர்க் நகரில் உள்ள கிராண்ட் சென்ட்ரல் நிலையத்தில் இருந்து நியூ ஹேவன் நோக்கி நேற்று முன்தினம் மாலை அதிவேக மின்சார இரயில் ஒன்று புறப்பட்டுச் சென்றது.

இந்த இரயிலில் சுமார் 250 பயணிகள் இருந்தனர். உள்ளூர் நேரப்படி மாலை 6 மணியளவில் கனெக்டிக்கட் அருகேயுள்ள பிரிட்ஜ்போர்ட் பகுதியில் இரயில் சென்ற போது எதிர்பாராத விதமாக தண்டவாளத்தை விட்டு விலகி சாய்ந்தது.

அப்போது எதிர்திசையில் இருந்து வேகமாக வந்த மற்றொரு இரயில் சாய்ந்து நின்ற இரயிலின் மீது பயங்கர சத்தத்துடன் மோதியது.

இந்த விபத்தில் 60 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இந்த விபத்தினால் நியூயோர்க் - பாஸ்டன் நகருக்கிடையிலான இரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

# பாகிஸ்தான் தேர்தலில் 150 பெண்களில் 6 பேர் வெற்றி



பாகிஸ்தான் தேர்தலில் 150 பெண்களில் 6 பேர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானில் மே 11ஆம் திகதி நடந்த தேர்தலில் 272 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் 11 தொகுதிகளில் 150 பெண்கள் போட்டியிட்டனர். அவர்களில் 6பேர் மட்டுமே வெற்றி பெற்றனர். கடந்த நாடாளுமன்றத்தில் 18 பெண்கள் உறுப்பினர்களாக இருந்தனர். இது தற்போது மூன்றில் ஒரு பங்காக குறைந்துள்ளது.

கைபர், பக்துன்கவா, பலுசிஸ்தான் மாகாணங்களிலிருந்து எந்தப் பெண் வேட்பாளரும் வெற்றி பெறவில்லை. வெற்றி பெற்றவர்களில் 4 பேர் தொடர்ந்து மூன்றாவது முறையாக நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல்; 49 பேர் உயிரிழப்பு 82பேர் காயம்





ஈராக்கில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் 49 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் சிறுபான்மை சன்னி முஸ்லிம்களுக்கும், பெரும்பான்மையாக உள்ள ஷியா முஸ்லிம்களுக்குமிடையே அடிக்கடி மோதல நடந்துவருகிறது.

இரு தரப்பினரும் மத வழிபாட்டு தலங்களைக் குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடாத்தி பொது மக்களைப் பலி வாங்கி வருகின்றனர்.

இந்நிலையில் இத்தலைநகர் பாக்தாத் அருகே உள்ள பகுபா நகரில் சன்னி முஸ்லிம்களின் மசூதி அருகில் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன. மசூதியில் தொழுகை முடிந்து வெளியே வரும்போது ஒரு குண்டு வெடித்தது.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த பொதுமக்கள் ஒரு இடத்தில் கூடி நின்ற போது, அங்கு இரண்டாவது குண்டு வெடித்தது. இந்தத் தாக்குதலில் 41 பேர் கொல்லப்பட்டதுடன், 57 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதேபோல், தெற்கு பாக்தாத்தில் சன்னி முஸ்லிம் ஒருவரின் இறுதிச்சடங்கு நடந்த இடத்தின் அருகே குண்டு வெடித்தது. இதில் 8 பேர் இறந்தனர். 25இறகும் மேற்பட்டோர் காயம அடைந்தனர்.

நேற்று முன்தினம் கிர்குக், பாக்தாத் ஆகிய இடங்களில் உள்ள ஷியா மசூதிகள் மீது நடாததப்பட்ட வெடிகுண்டுத்தாக்குதல்களில் 22 பேர் கொல்லப்பட்டனர். சன்னி பிரிவு எம்.பி.யின் சகோதரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தத் தொடர் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பகுபா நகரில் தாக்குதல் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து இரு பிரிவினரிடையே உள்ள மோதல் உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

# மண்டேலாவின் முன்னாள் மனைவியின் உடமைகள் ஏலத்தில் விற்பனை



பாடசாலைக்கு செலுத்த வேண்டிய நிலுவையை செலுத்தாததால், தென் ஆப்ரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவியின் உடமைகள் ஏலம் விடப்பட உள்ளன.

தென் ஆப்ரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் இரண்டாவது மனைவியாக இருந்தவர், வின்னி மடிக்கிசெலா. ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள, சோவிட்டோ நகர பாடசாலைக்கு வழங்க வேண்டிய 1.18 இலட்சம் ரூபாயை செலுத்தாமல் விட்டுவிட்டார்.

இது தொடர்பாக, பாடசாலை நிர்வாகம் தொடர்ந்த வழக்கில், வின்னி மண்டேலா வீட்டில் உள்ள பொருட்களை விற்று, இந்தத் தொகையை செலுத்தும்படி, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, வரும், 21ஆம் திகதி வின்னியின் வீட்டில் உள்ள ஏராளமான ஓவியங்களும், வெள்ளிப் பொருட்களும் ஏலம் விடப்பட உள்ளன.



மாலி வந்துள்ள பிரான்ஸ் அதிபர் பிரான்காய்ஸ் ஹாலண்டேவின் துணைவி வலெரி டிரெய்வெய்லருக்கு, காவ் நகரில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# அவுஸ்ரேலியாவில் நிலநடுக்கம்




அவுஸ்ரேலியா அருகே உள்ள சாலமன் தீவுகளில் 5.9 ரிக் டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற் பட்டது.

லாதா நகரிலிருந்து 93 கி.மீற்றர் தென்மேற்கே உள்ள சாந்தா குரூஸ் தீவில் 13 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இந்த நிலநடுக்கத்தால் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அவுஸ்ரேலிய புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. கட்டடங்கள் லேசாக அதிர்ந்ததை உணர முடிந்தது என்று தீவைச் சேர்ந்த மக்கள் கூறினர்.

மேலும், லாதா நகரில் கடந்த பெப்ரவரியில் 8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது எழுந்த சுனாமி அலையில் அடித்துச் செல்லப்பட்டு 10 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திறக்கப்படாத வைத்தியசாலை குறித்து புதுக்குடியிருப்பு மக்கள் கவலை

புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்படும் இதுவரை திறக்கப்படாமையினால் மக்கள் சிகிச்சை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக புதுக்குடியிருப்பு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக இந்த வைத்தியசாலை முற்றாக அழிந்துள்ளது. மக்களின் மீள் குடியேற்றத்திற்குப் பின்னர் இந்த வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாணப் பணிகள் யாவும் நிறைவு பெற்றுத் தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் யாவும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு வழங்கபட்டுள்ள போதும் இதுவரை வைத்தியசாலை திறக்கப்படாமல் உள்ளது.

தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 11500 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 811 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் தங்கள் மருத்துவ தேவைக்கு புதுக்குடியிருப்பில் இருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் பரந்தன் வீதியில் உள்ள கைவேலியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மருத்துவமனைக்கே சிகிச்சைக்காக செல்லவேண்டியுள்ளது எனவே இதனை விரைவில் திறந்து மக்களின் மருத்துவதேவைகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(02)

# விலைக் கட்டுப்பாடு இன்றி இயங்கும் உணவகங்கள்

(வரணி)

யாழ்.மாவட்டத்தில் எத்தனையோ சிற்றுண்டிச் சாலைகள் இயங்கி வரும் சூழலில் உணவக உரிமையாளர்கள் சிற்றுண்டிகள், தேநீர், பால் தேநீர் போன்றவற்றின் விலைகளைத் தாம் நினைத்தபடி விற்பனை செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக நுகர்வோர் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது.

ஒரு சில உணவகங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சிலவற்றில் இந்த நடைமுறை கடைப்பிடிப்பதைக் காணமுடியவில்லை. தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் சமநிலையாக தேநீர் 10 ரூபாவாகவும் பால்தேநீர் 20 ரூபாவாக விற்கப்படும் அதே வேளை, நெல்லியடி பருத்தித் துறைப் பகுதியில் தேநீர் 15 ரூபாவாகவும், பால் தேநீர் 25 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

உணவு தீன்பண்டங்கள் அதைவிட மோசமாகவே உள்ளது. உணவக உரிமையாளர்களைக் கருத்துக் கேட்டால் தரம், நிறை என்று பல காரணங்கள் கூறும் இவர்கள் தேநீர் வகைகளுக்கு குடா நாட்டில் சீனி, தேயிலை, பால் மா பொறித்த விலையில் விற்பனை செய்யப்படுவதால் ஏன் இப்படி மாறுபட்ட விலையில் விற்பனை செய்கின்றனர் என்று பலரும் குற்றம் சுமத்துகின்றனர். (150)

## மனிதக் கேடய...

பூமிக்கு அர்ப்பணித்தனர். அவ்வாறான தனித்துவம் மிக்க படையினரை சிலர் அனைத்துலக தூக்குமேடைக்கு கொண்டு செல்ல முயற்சித்தனர்.

ஒரு காலத்தில் காலிமுகத்திடல் மூடப்பட்டிருந்தது. மத்திய வங்கிக் கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டது.

அதற்கு அருகில் இருக்கும் ஜனாதிபதி மாளிகைக்கும் குண்டு லொறி அனுப்பப்பட்டது.

அவற்றுக்கு அருகிலுள்ள விடுதிகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அனுராதபுரம் மகாபோதி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. காத்தான் குடியில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப் பட்டது.

மாத்தறையில் முஸ்லிம்களின் பேரணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த அமைச்சர் மகிந்த விஜேசேகர இன்னும் குணமடையாமல் இருக்கிறார்.

நாட்டில் பல இடங்கள் மற்றும் சந்திகள், புலிகள் நடத்திய தாக்குல்களைக் கொண்டு அடையாளப்படுத்தப்படும் நிலை காணப்பட்டது.

அந்த இடங்களை கடந்து செல்லும் போது இந்த இடத்தில் தான் ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்டார். இந்தச் சந்தியில் தான் மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க கொல்லப் பட்டார் என்று அடையாளப்படுத்துகின்றனர்.

நாட்டில் எங்கும், எந்த இடத் துக்கும் சென்று, எதனையும் செய்யும் வகையில் புலிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட காலமொன்றும் இருந்தது. இதயத்தில் மரண பயமிருந்த நாடாகவும் இந்த நாடு இருந்தது. மக்களை மீட்டெடுப்பதற்கு யாருமே முன்வரவில்லை. சமாதானத்திற்காக அழைத்து வந்தவரைக் கொலை செய்தனர்.

மக்கள் தாக்கப்பட்டபோது ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி, மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டார். புலிகளுக்கு ஆயுதங்களை கொடுத்து உதவிய அதிபர் புலிகளினாலேயே கொல்லப்பட்டார்.

சமாதானத்திற்கு அழைத்து வந்த இந்தியப் பிரதமரையும் புலிகள் இந்தியாவில் வைத்தே கொலை செய்தனர்.

புலிகளுடன் மோத வேண்டாம் அவர்கள் கேட்பதைக் கொடுக்குமாறு அனைத்துலகம் எம்மிடம் அடிக்கொரு தடவை ஆலோசனை கூறியது.

எனினும், நாம் எமது இளைஞர்களின் பலம் மற்றும் வீரத் தில் நம்பிக்கை கொண்டோம். பயத்தை ஒழித்து நம்பிக்கை ஊட்டினோம்.

அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றி சிறுபிள்ளைகளின் இதயங்களுக்கே நன்றாக புரிகின்றது.

புரிந்துணர்வு உடன்பாடு மூலமாக நாட்டை பிரித்து கொடுக்கவும் முயற்சித்தனர்.

அவ்வாறானவர்களே குளங்களை கட்டிய மன்ன னான மகாசேனனின் பெயரை புயலுக்கு சூட்டுமாறு 2003 ஆம் ஆண்டு பரிந்துரை செய்தனர்.

வடமாகாணத்தை பொறுத்த வரையில் 12 கட்சிகள் தமது அரசியல் செயற்பாடுகளை சுதந்திரமாக முன்னெடுக்கின்றன.

பயந்து கொண்டு கொழும்பிலிருந்து அன்று அரசியல் செய்தவர்கள் இன்று எந்த அச்சமும் இன்றி அரசியல் செய்கின்றனர்.

வடக்கு கலாசாரத்தை நாசப்படுத்துவதற்கு பிரபாகரனும் புலம் பெயர்ந்தவர்களும் முயற்சித்தனர்.

மனித கேடயங்களாக தடுத்து வைக்கப்பட்ட மக்களை மீட்டெடுத்த போது அவர்க ளுக்கு சாப்பாடு கொடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை.

புலம்பெயர்ந்தவர்களும் முன்வரவில்லை அவர்களுக்கு இராணுவமும் அரசாங்கமுமே உணவு கொடுத்தது.

தூக்குமேடை வரை செல்ல வேண்டியவர்களுக்கு நாம் மன்னிப்புக் கொடுத்தோம். பலர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

வேறு நாடுகளில் இவ்வா றான நடைமுறை இல்லை. சிவில் பாதுகாப்புப் படையில் 4 ஆயிரம் தமிழர்களை இணைத்துள்ளோம்.

முப்படைகளிலும் இணை வதற்கு தமிழர்கள் வரிசைகளில் நிற்கின்றனர். படைகளில் தமிழர்கள் இணைவதை தெற்கில் உள்ளவர்கள் எதிர்க்கவில்லை, வடக்கில் உள்ள சிலரும் புலம்பெயர்ந்தவர்களுமே எதிர்த்தனர்.

அதனால் தான் அரசாங்கத் திற்கு எதிராக ஐ.நா மனித உரிமை பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, அதற்கு எதிராக கிளிநொச்சியில் மக்கள் அணி திரண்டு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு மக்களின் இதயங்களை நான் நன்கு அறிவேன்.

ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலத்தை தோல்வியடையச் செய்து கொப்பேகடுவையை வெற்றி பெறச் செய்தவர்கள் அவர்கள்.

காலத்திற்கு காலம் ஊடக சுதந்திரம் மற்றும் மனிதஉரிமை பிரச்சினைகள் தொடர்பாக அனைத்துலக மட்டத்தில் குரல் கொடுப்பர்.

அதற்கெல்லாம் நான்கு மாதங்களுக்கு ஒருதடவை நாங்கள் பதிலளித்து கொண்டிருக்கிறோம்.

ஒன்றிணைக்கப்பட்ட நாட்டின் ஒரு அங்குலத்தையேனும் பறிப்பதற்கோ அல்லது, பிரிப்பதற்கோ ஒரு போதும் இடமளிக்கமாட்டேன் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## முள்ளி....

குறிப்பிடத்தக்கது. தமது நினைவேந்தல் நிகழ்வினைக் குழப்பும் முகமாகவே நினைவுத்தூபி உடைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சாட்டியுள்ளது (160)

# குடிநீர் விநியோகம் சீரின்மை; காரைநகர் மக்கள் கவலை

(காரைநகர்)

காரைநகரில் குடிநீர் விநியோகம் சீரற்று இருப்பதனால் தாங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகும் நிலைமை காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக காரைநகர் மக்களின் குடிநீர் விநியோகம் சுன்னாகத்தில் இருந்து பௌசர்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. லண்டன் காரைநகர் நலன்புரிச் சங்கமும், காரைநகர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

காரைநகர் பகுதியில் குடிநீரை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக அறுநூறுக்கும் மேற்பட்ட நீர்த் தாங்கிகள் வீடு வீடாக வைக்கப்பட்டு, இக்குடிநீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

ஆனாலும் கடந்த சில மாதங்களாக குடிநீர் விநியோகத்தில் ஒரு சீரற்றதன்மை காணப்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் குடிநீரைப் பெறுவதில் சிரமங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

## கஜேந்திரன்...

மன்னார் மாவட்டத்திற்கான முள்ளிவாய்க்கால் பேரவல நினைவு நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை கடற்படையினரும் இராணுவத்தினரும் இணைந்து பொலிஸார் சகிதம் சுற்றி வளைத்து தேடுதல்களை நடத்தியிருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே நேற்று மாலை 4.00 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் எஞ்சியோர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையின் பின் தற்சமயம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## கழுத்து வெட்டி...

பரராஜசிங்கம் கிருபாகரன், குமாரவேல் சுதாகரன் ஆகியோர் கள்ளுத் தவறணை ஒன்றில் கள்ளுக் குடித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது, சதாசிவம் தயாபரனுக்கும், சுப்பிரமணியம் தர்மராசாவுக்கும் இடையில் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அதன்போது, சுப்பிரமணியம் தர்மராசா தனது வேட்டியை கிழித்து சதாசிவம் தயாபரனை மின் கம்பத்தில் கட்டிவிட்டு பெரிய வாளினால் கழுத்தை வெட்டிக் கொலை செய்ததுடன், கழுத்தினை சரவணை சந்தியில் போட்டு விட்டு தலை மறைவாகியுள்ளார்.

இச்சம்பவத்தின் போது, சம்பவ இடத்தில் இருந்த பரராஜசிங்கம் கிருபாகரன், குமாரவேல் சுதாகரன் ஆகியோர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலை தொடர்பில் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 06 ஆம் திகதி சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கொலையின் பிரதான நபரான சுப்பிரமணியம் தர்மராசா தலைமறைவாகியிருந்த நிலையில், மேற்படி வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்றுவந்தது.

இதன் போது, இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிவாதிகளான பரராஜசிங்கம் கிருபாகரன், குமாரவேல் சுதாகரன் ஆகிய இருவ ரும் மன்றில் சாட்சியமளித்தனர். இச்சாட்சியத்தின் பிரகாரம், 12.03.2012 சுப்பிரமணியம் தர்மராசா குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அதன் பின்னர் தலைமறைவாகியிருந்த நபருக்கு எதிராக நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது இந் நிலையில், ஊர்காவற்றுறை பொலிஸாரினால் அவர் கைதுசெய்யப்பட்டு யாழ். மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்திய போதே ஆணையாளர் ஜே.விஸ்வநாதான் சந்தேகநபரைக் குற்றவாளியாக இனங்கண்டதுடன் மரணதண்டனை தீர்ப்பையும் உறுதி செய்தார். (25)

## கூட்டமைப்பு...

இச்சம்பவம் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது

நேற்று மாலை 4.00 மணியளவில் மன்னாரில் தமது உயிர் நீத்த சொந்தங்களை நினைத்து இரங்கல் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட சிலர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் செயலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மை யாகக் கண்டிக்கிறது.

உயிர்நீத்த சொந்தங்களை நினைத்து கண்ணீர் சிந்தும் உரிமைகூட தமிழ் மக்களுக்குக் கிடையாதா? தமது சொந்தங்களை நினைத்துக் கண்ணீர் சிந்துபவர்களை கைதுசெய்வதனூடாக அரசாங்கம் எதனைச் சாதிக்க முயல்கிறது என்பது தெரியவில்லை. சர்வதேசத்திற்கு ஒரு முகத்தினையும், தமிழ் மக்களுக்கு பல முகத்தினையும் அரசு காட்ட முனைவது கண்டிக்கத்தக்கது.

எங்களுக்கு உரிமையிருக்கிறது எமது உயிர்நீத்த சொந்தங்களை நினைத்துக் கண்ணீர் சிந்துவதற்கும் அவர்களை நினைவு கூர்வதற்கும். அந்த உரிமையைக்கூட தட்டிப் பறிக்கப் பார்ப்பது கண்டிக்கத்தக்கது. இவ் இரங்கல் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற அரசியல் பிரமுகர்களைக் கைது செய்வது ஜனநாயகமாகுமா? எனவே, கைது செய்தவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அரசினைக் கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு இச்சம்பவத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்த கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார்.

## முள்ளிவாய்க்கால்...

சேர்ந்த சிறி ரணதுங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

வன்னிப்போரில் பெற்றோரை இழந்த 100 சிறுவர்களுக்கு தலா மூவாயிரம் ரூபா நிதியுதவியும் அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவது அவசியம்

## – தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என தேசிய சமாதானப் பேரவை அறிவித்துள்ளது.

யுத்த நிறைவு தொடர்பான நினைவு நிகழ்வுகளை அனைத்து இன மக்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளதாகவும், இதனை அரசாங்கம் அமுல்படுத்தத் தவறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

யுத்த நிறைவின் பின்னர் மக்களின் வாழ்க்கையில் பாரியளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

யுத்தத்தில் உயிர் நீத்த அனைவரையும் நினைவு கூரும் வகையிலான நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டுமென தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் ஏற்பட்ட வடுக்களை ஆற்றவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட முக்கிய விடயங்கள் இன்னமும் அமுல்படுத்தப்படாமை வருத்தமளிப்பதாக தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் வெளியிடப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் முக்கிய பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என தெரிவிக்பபட்டுள்ளது.

தமிழ் மக்களின் மனோ நிலைமையை அனைத்து தரப்பினரும் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த வெற்றி நிகழ்வுக் கொண்டாட்டங்கள் தமிழ் மக்களின் மனதுகளை காயப்படுத்தும் வகையில் அமைவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் பாரியளவில் இழப்புக்களை சந்தித்துள்ளனர், யுத்த வெற்றியினால் அவர்கள் எதனையும் ஈட்டவில்லை என தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது

# உயர்தரப் பரீட்சையில் 2 இலட்சம் பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை 31 ஆம் திகதி வரை நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என். ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை 2 இலட்சத்து 89 ஆயிரத்து 156 பேர் பரீட்சைக்கு தோற்றத் தகுதிபெற்றுள்ளனர். அதில் 2 இலட்சத்து 34 ஆயிரத்து 514 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாகத் தோற்றவுள்ளனர். 43 ஆயிரத்து 572 பேர் தனிப்பட்ட பரீட்சாத்திகளாவர். 11 ஆயிரத்து 70 பேர் பழைய பாடதிட்டத் திற்கமைய பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என்.ஜே. புஷ்பகுமார குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட நேர அட்டவணையைப் போன்றே இவ்வருடமும் பரீட்சைக்கான நேர அட்ட வணை தயாரிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என்.ஜே.புஷ்பகுமார மேலும் தெரிவித்துள்ளார்.

# சவுதியில் தொழில் வாய்ப்பு; 232 இலங்கையர் நிர்க்கதி

தொழில் வாய்ப்பு பெற்று சவூதி அரேபியாவுக்குச் சென்ற 232 இலங்கையர்கள் தம்மாவில் நிர்க்கதியான நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர்கள் அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி இருப்பதாகவும், சவூதி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றினால் இவர்கள் அனைவரும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இணங்கப்பட்ட வகையில் தங்களுக்கான வேதனங்கள் மற்றும் சலுகைககள் எவையும் வழங்கப்படவில்லை என்று குறித்த பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் அவர்கள் தொடர்பில் இலங்கையில் உள்ள அவர்களின் உறவினர்கள் யாரும் இதுவரையில் முறைப்பாடு தெரிவிக்கவில்லை என்றும் முறைபாடு தெரிவிக்கப்படும் பட்சத்தில், இதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிமனை தெரிவித்துள்ளது

# சென்னையை வீழ்த்தியது பெங்களூர் றோயல்ஸ்




(பெங்களூர்)

சென்னை சுப்பகிங்ஸ் அணியுடனான முக்கியமான போட்டியில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி 24 ஓட்டங்களால் வெற்றிபெற்றபோதிலும் 'பிளே ஒப்' சுற்றுக்குத் தகுதி பெறுவதில் நெருக்கடி நிலையிலேயே உள்ளது.

பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் நேற்றிரவு 8 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாக இருந்த நிலையில் திடீரென மழை குறுக்கிட்டதனால் போட்டி இரவு 11 மணிக்கே ஆரம்பமானது. இதனால் 8 ஓவர்களாக ஆட்டம் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற டோனி களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இதனால் பெங்களூர் றோயல்ஸ் துடுப்பெடுத்தாடியது. அவ்வணி சார்பாக கெயில், ஹோலி ஆரம்ப வீரர்களாக களமிறங்கி அசத்தியது. கெயில் 13 பந்தில் 4 சிக்சர்களுடன் ஆட்டமிழக்க, பின்னர் வந்த டி வில்லியர்ஸ் 5 ஆட்டமிழந்தார். எனினும் ஹோலி தனது அதிரடியில் கலக்க பெங்களூர் றோயல்ஸ் 8 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப்பெற்றது. இதில் ஹோலி ஆட்டமிழக்காது 29 பந்திலி 4 சிக்சர்கள் 6 பவுன்றிகள் அடங்கலாக 56, ஹென்றிகுயின்ஸ் 3 பந்தில் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிராவோ சர்மா இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 107 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியெனக் களமிறங்கிய சென்னை அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்று 24 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் விஜய் 32, டோனி 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சகீர்க்கான் 4, ராம்பவுல், வினய்குமார் தலா 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஹோலி தெரிவானார்.

# கொள்ளுப்பிட்டி கடலில் கடற்படைப்படகு விபத்து

## – ஒருவர் மாயம், இருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி கடற்பரப்பில் நேற்று முற்பகல் கடற்படையினருக்குச் சொந்தமான சிறிய படகொன்று விபத்துக்குள்ளானதில் கடற்படை வீரரொருவர் காணாமற்போனதுடன், மேலும் இரண்டு கடற்படை வீரர்கள் காயமடைந்துள்ளதாக கடற்படைப்பேச்சாளர் கொமாண்டர் கோசலா வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

காயமடைந்த இரண்டு கடற்படை வீரர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காணாமற்போன கடற்படை வீரரை கண்டுபிடிக்கும் வகையில் தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை விபத்துக்குள்ளான படகை கடற்கரைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபர்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மின் நிலைய புகையினால் சுன்னாகம் மக்கள் பாதிப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேறும் புகையினால் பொதுமக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருவதாக பொதுமக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் அண்மைக்காலமாக பாரிய மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டு யாழ். குடாநாட்டுக்கான மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மின்பிறப்பாக்கிகளில் இருந்து வெளியேறும் புகைகள் சுமார் எண்பது அடிக்கு மேற்பட்ட உயரத்தில் குழாய்கள் மூலம் வெளியேற்றப்படுகின்றபோதிலும் காற்று உள்ள காலங்களிலும் சரி காற்று அற்ற காலங்களிலும் சரி மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதி மக்களுடைய வீடுகளின் மேல் கரித்துகள் கொட்டுவதும், இதனால் உடைகள் முதல் ஏனைய பொருட்கள் பாதிக்கப்படும் நிலைமையும் காணப்படுகின்றது.

இதனைவிட புகையுடன் ஒரு வகையான மணமும் கூட எழுவதினால் இதனை சுவாசிப்பதினால் பொதுமக்கள் நோய்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் உள்ளாகும் நிலைமை ஏற்படலாம என அந்தப் பகுதியில் உள்ள வைத்தியர்கள் தொவித்துள்ளதாகவும் அந்தப் பகுதியில் வாழும் பொதுமக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்ட சுற்றுச் சூழல் அதிகாரிகளுடன் இது சம்பந்தமாக தொடர்பு கொண்டதாகவும் குறிப்பிட்ட மின் நிலையத்திற்கான அனுமதி கொழும்பில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் தாம் இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளதாக பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

2009 தொடக்கம்
சிகரம் தொடு சஞ்சிகை => ஊடகப் பயிற்சி => கல்வி-தொழில் வழிகாட்டி சேவை => வெளிநாட்டுக் கல்வி => தொழில் வாய்ப்புக்கள் => www.sikaram.lk இணைய ஊடகம் என...

3 ஆண்டுகளைக் கடந்து சிகரம் வெற்றிப் பயணம்
இப்போது புதிய இடத்தில், மேலும் பல புதிய சேவைகளுடன்...




- O/L அல்லது A/L உடன் UK, Australia, New Zealand, Canada, USA, Malaysia, Thailand பல்கலைக்கழக அனுமதிகள் & தொழில்வாய்ப்புக்கள்
- O/L சித்தியடையாதவர்களுக்கும். மாதம் 50,000/- வருமானம். University of East London, AETS Australia சான்றிதழ்களுடன் ஹொட்டேல் பயிற்சிநெறி
- எந்தவொரு நாட்டுக்குமான Student Visa, Job Visa, Visit Visa, Skilled Migration, Visa Rejection Appeal etc.
- ENGLISH, THE EASY WAY, Modern 5 Way Approach இலகுவழி ஆங்கிலக் கற்கைநெறி
- 500க்கு மேற்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள். கற்கைநெறிகள் தொடர்பான விபரங்களுடன் சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து 2012-2013 (விலை 300/-)
- சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி: (மாத இதழ்)
- கல்வி-தொழில் வழிகாட்டி விபரங்களை தினமும் அறிந்துகொள்ள www.sikaram.lk, facebook.com/edusikaram

எவருக்கும் அவரவர் தராதரத்துக்கேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி-தொழில் வாய்ப்புக்கள்

(C/2529)

MEDIA & EDUCATION
சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.